
## கமெண்ட் கந்தர்...




Follow us:

# தமிழன்

THAMILAN

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர் : 03, இதழ்: 89 சுபகிருது வருடம், ஐப்பசி மாதம் 08ஆம் திகதி செவ்வாய்க்கிழமை (25.10.2022) ஹிஜ்ரி 1444, ரபிஉல் அவ்வல் - 28 0115886187 - பக்கங்கள் 10

விலை ரூ.50

## உஷ்



அரசியலமைப்பின் 22 ஆவது திருத்தம் நிறைவேறிய பின்னர் முன்னாள் அமைச்சர் பெசில் அமெரிக்காவிலிருந்து மேற்கொள்ளும் தொலைபேசி அழைப்புகளுக்கு பதிலளிக்காமல் பொதுஜன பெரமுனவின் சிரேஷ்ட உறுப்பினர்கள் சிலர் தவிர்த்து வருகின்றனராம்.

அக்கட்சி இப்போது ஆறு பிரிவுகளாக பிரிந்துள்ளதால் அவற்றை ஒன்றுசேர்க்க முடியாமல் தடுமாறுகிறாராம் பெசில்.



தீபாவளிப் பண்டிகையை முன்னிட்டு கொழும்பு ஸ்ரீபொன்னம்பலவாணேஸ்வரர் தேவஸ்தானத்தில் நேற்று விசேட பூஜை வழிபாடுகள் இடம்பெற்றன. (படப்பிடிப்பு: லலித் பெரேரா)

# படைக் கட்டுப்பாடுகள் நீக்கப்பட வேண்டும்!

## அமைச்சர் டக்ளஸ் ஜனாதிபதி ரணிலிடம் அவசர கோரிக்கை

### வடக்கு - கிழக்கின் முக்கியமான பிரச்சினைகளை சுட்டிக்காட்டி விசேட மனு



•நமது விசேட செய்தியாளர்

வடக்கு - கிழக்கில் புனித பூமிகள், பாடசாலைகள், தொல்பொருள் முக்கியத்துவம் வாய்ந்த இடங்கள் ஆகியன படையினரின் கட்டுப்பாட்டில் இருந்து விடுவிக்கப்படவேண்டுமென கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பில் இன்று நடைபெறவுள்ள விசேட கூட்டத்தில் விசேட மனுவொன்றையும் அமைச்சர் டக்ளஸ் சமர்ப்பிக்கவுள்ளார்.

நாட்டில் வாழும் பல்லின மக்களுக்கிடையே நல்லிணக்கத்தை ஊக்குவிப்பதற்காக மற்றும் வடக்கு - கிழக்கு மோதல்களின் பின்னர் மீள்குடியமர்த்தல், காணி மற்றும் காணாமல் போன ஆட்கள் பற்றி மக்கள் எதிர்கொண்டுள்ள பிரச்சினைகளுக்குத் தீர்வு வழங்குவதற்காக ஜனாதிபதி தலைமையில் நல்லிணக்கம் தொடர்பான அமைச்சரவை உபகுழு கடந்த வாரம் நியமிக்கப்பட்டது.

பிரதமர் தினேஷ் குணவர்தன...

02 பக்கம்



# தமிழ் அரசியல் கைதிகள் எண்மர் நேற்று விடுதலை

02 பக்கம்


# லிட்ரோ எரிவாயுவின் விலை குறையும்



எதிர்வரும் நவம்பர் மாதம் லிட்ரோ எரிவாயுவின் விலை குறைக்கப்படும் என லிட்ரோ எரிவாயு நிறுவனம் தெரிவித்துள்ளது.

எரிவாயு விலை சூத்திரத்தின்படி ஒவ்வொரு மாதமும் 5ஆம் திகதி விலை திருத்தம் இடம்பெறுவதாகவும், அன்றைய தினம் விலையைக் குறைக்கத் திட்டமிட்டுள்ளதாகவும் அந்நிறுவனம் குறிப்பிட்டுள்ளது.

# கசினோக்களுக்கான வரி 150 வீதத்தால் அதிகரிப்பு



கசினோ நிலையங்களுக்கான வரியை மேலும் அதிகரிக்க கசினோ சட்டத்தில் விரைவில் திருத்தம் கொண்டு வரப்படும் என நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.

20 கோடி ரூபாவாக இருந்த கசினோ ஒன்றின் வருடாந்த வரி ஓகஸ்ட் முதலாம் திகதி முதல் 150 சதவீதத்தினால் 50 கோடி ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளதாகவும் இராஜாங்க அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

02 பக்கம்

# 08 மாதங்களில் 7,568 சிறுவர் துன்புறுத்தல்கள்

•ம.அகிலேஷ்

நாட்டில் இவ்வருடத்தில் கடந்த எட்டு மாதங்களில் ஏழாயிரத்து 568 சிறுவர் துன்புறுத்தல் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளதாக சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை தெரிவித்துள்ளது. கம்பஹா, அநுராதபுரம், குருநாகல், கண்டி, மாத்தளை, இரத்தினபுரி மாவட்டங்களில் சிறுவர் துன்புறுத்தல் தொடர்பில் அதிக முறைப்பாடுகள் கிடைக்கப்பெறுவதாக அதிகார சபையின் தலைவர் உதயகுமார அமரசிங்க தெரிவித்தார்.

தெல்தெனிய பாடசாலையொன்றில் ஆசிரியர் ஒருவர் மாணவரைத் தாக்கிய சம்பவம் தொடர்பில் முறைப்பாடுகள் கிடைக்கும் பட்சத்தில் அதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என அவர் சுட்டிக்காட்டினார்.

02 பக்கம்

# தேயிலை உற்பத்தி வீழ்ச்சி



நாட்டில் தேயிலை உற்பத்தி கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் 18 வீதத்தால் வீழ்ச்சியடைந்துள்ளதாக புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன. மேலும், கடந்த செப்டெம்பர் மாதத்தில் மாத்திரம் தேயிலை உற்பத்தி 7.8 வீதமாகக் குறைவடைந்துள்ளது.

இவ்வாண்டு ஜனவரி முதல் செப்டெம்பர் வரையான ஒன்பது மாத காலப்பகுதியில் 192.37 மில்லியன் கிலோ கிராம் தேயிலை உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. இதே காலப்பகுதியில் கடந்த ஆண்டு 234.72 மில்லியன் கிலோ கிராம் தேயிலை உற்பத்திசெய்யப்பட்டுள்ளது.

இலங்கை ரூபாவுக்கு நிகரான அமெரிக்க டொலரின் பெறுமதி உயர்வடைந்ததன் காரணமாக தேயிலை ஏற்றுமதி வருமானம் அதிகரித்திருந்தது. இந்நிலையிலேயே தேயிலை உற்பத்தியில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாக தேயிலை ஏற்றுமதி முகவர் நிறுவனங்கள் சுட்டிக்காட்டியுள்ளன.



இலங்கை வரலாற்றில் முதல் தடவையாக தீபாவளிப் பண்டிகையை முன்னிட்டு ஜனாதிபதி செயலக வளாகத்தில் நேற்று (24) நந்திக்கொடிகள் பறக்கவிடப்பட்டிருந்தன.

(படப்பிடிப்பு: சமன் அபேசிறிவர்தன)

# அத்தியாவசிய மருந்துகளுக்கு மருத்துவமனைகளில் தட்டுப்பாடு

## காயங்களுக்கான பஞ்சுகளும் இல்லையென மருந்தக உரிமையாளர்கள் குற்றச்சாட்டு



அரச வைத்தியசாலைகளில் அத்தியாவசிய மருந்துகளுக்கு பெரும் தட்டுப்பாடு நிலவுவதாக அகில இலங்கை தனியார் மருந்தக உரிமையாளர்கள் சங்கம் குற்றஞ்சுமத்தியுள்ளது.

02 பக்கம்

# அரசியலமைப்பு முழுமையாக மாற்றியமைக்கப்பட வேண்டும்

## அநுரகுமார எம்.பி. வலியுறுத்து



•நா.தினுஷா

தற்போதுள்ள நாடாளுமன்றத்தினால், நடைமுறையிலுள்ள அரசியலமைப்பில் கூட மக்கள் நலன்சார்ந்த திருத்தங்களைக் கொண்டுவர முடியாது. இந்நிலையில், இந்த அரசாங்கமே புதிய அரசியலமைப்பு தொடர்பில் பேசுவது நகைப்புக்குரியதாகும் என்று தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார். இந்நிலைமையில் மாற்றம் ஏற்பட வேண்டுமெனில் அரசியலமைப்பு முழுமையாக மாற்றியமைக்கப்பட வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

02 பக்கம்

# சம்பந்தன் அரசியலைவிட்டு விலகினால்தான் தீபாவளி

## காணாமலாக்கப்பட்டோரின் உறவினர்கள் வவுனியாவில் தெரிவிப்பு

03 பக்கம்

# நாடாளுமன்றத்தைக் கலைத்து பொதுத் தேர்தலை நடத்தவும்

## ஜனாதிபதி ரணிலிடம் ஹர்ஷன எம்.பி. கோரிக்கை

•நா.தினுஷா

தற்போதுள்ள நாடாளுமன்றம் மக்களின் அபிமானத்தை வென்றதல்ல. மக்களின் அபிலாஷைகளை நிறைவேற்றக்கூடிய புதிய நாடாளுமன்றமொன்று உருவாக்கப்படவேண்டும். அவ்வாறெனில், நாடாளுமன்றத்தை உடனடியாகக் கலைத்து தேர்தலொன்றை நடத்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷன ராஜகருணா தெரிவித்தார். கொழும்பில் நேற்று ஊடகவியலாளர்களின் கேள்விகளுக்கு பதிலளித்தபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

02 பக்கம்

## மீன் வெட்டியது தவறாம்

# மனைவியை கத்தியால் கண்டபடி குத்திய கணவர்

•சாவகச்சேரி செய்தியாளர்

மீன் வெட்டியது தவறு எனக் கூறி மனைவியை கணவன் கத்தியால் குத்திய சம்பவம் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை மதியம் கொடிகாமம் தவசிகுளம் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது, சந்தைக்குச் சென்று மீன் வாங்கிக்கொண்டு வந்த கணவன் அதனை வெட்டுமாறு மனைவியிடம் கொடுத்துள்ளார். இந்நிலையில், மனைவி மீனை வெட்டிக்கொண்டிருந்தபோது...

02 பக்கம்



வரலாற்று புகழ்மிக்க நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தில் தீபாவளியை முன்னிட்டு பக்தர்கள் நேற்று (24) வழிபாடுகளில் ஈடுபட்டனர். (படப்பிடிப்பு: யாழ். செய்தியாளர்)

# யாழ். பல்கலையில் 19 மாணவர்களுக்கு கற்றல் செயற்பாடுகளில் ஈடுபடத் தடை

யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் பகிடி வதை மற்றும் துன்புறுத்தல் செயற்பாடுகளில் ஈடுபட்ட 19 சிரேஷ்ட மாணவர்களுக்கு கற்றல் செயற்பாடுகளில் ஈடுபடுவதற்குத் தடைவிதிக்கப்பட்டுள்ளது.

புதிய கல்வி ஆண்டுக்கான கற்றல் செயற்பாடுகளுக்காக மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டு, பதிவுகள் இடம்பெற்றுள்ள நிலையில், புதுமுக மாணவர்களை பகிடி வதைக்குட்படுத்திய சிரேஷ்ட மாணவர்கள் தொடர்பில் கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளின் அடிப்படையில் இடம்பெற்ற விசாரணைகளின் போது குற்றம் நிரூபிக்கப்பட்ட கலைப்பீடத்தைச் சேர்ந்த 14 பேருக்கு ஆறு மாத கால வகுப்புத் தடையும், தொழில்நுட்ப பீடத்தைச் சேர்ந்த 4 பேருக்கு இரண்டு வருட கால வகுப்புத் தடையும், விஞ்ஞான பீடத்தைச் சேர்ந்த ஒருவருக்கு இரண்டு வருட கால வகுப்புத் தடையும் விதிக்கப்பட்டுள்ளது.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் பகிடிவதைக்கெதிரான தண்டனைச் சாசனத்தின் படி, குற்றங்களின் தன்மைக்கேற்ப விசாரணைக் குழுக்களினால் பரிந்துரைக்கப்பட்ட தண்டனைக் காலத்தை மாணவர் ஒழுக்காற்றுச் சபை சிபாரிசு செய்தது.

அந்த சிபாரிசுகளுக்கமைய, பேரவையினால் தண்டனை உறுதி செய்யப்பட்டுள்ளது. பேரவையின் தண்டனை குறித்த அறிவிப்பு அந்தந்த பீடாதிபதிகளின் ஊடாகத் துணைவேந்தரால் மாணவர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.


தண்டனைக் காலத்தினுள் குறித்த மாணவர்கள் கல்வி நடவடிக்கைகளில் ஈடுபடத் தடை விதிக்கப்பட்டுள்ளதுடன், பல்கலைக் கழகத்தின் எந்தவொரு பகுதியினுள்ளும் செல்வதற்கும் தடைவிதிக்கப்பட்டுள்ளது.

மேலும் தண்டனைக்குட்படுத்தப்பட்ட மாணவர்கள் விடுதிகளில் தங்கியிருப்பவராயின் விடுதியை விட்டு உடனடியாக வெளியேறுமாறும் அறிவிக் கப்பட்டுள்ளது.

இதேவேளை, கலைப்பீடத்துக்குத் தெரிவு செய்யப்பட்டு பதிவு செய்த மாணவர்களுக்கான வகுப்புகள் இன்று முதல் ஆரம்பிக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

# அதிசக்தி வலி நிவாரணி மாத்திரைகளை கொள்வனவு செய்த இரு மருத்துவர்கள்!

## வடக்கில் வெளியான அதிர்ச்சித் தகவல்



யாழ்ப்பாணம், வவுனியாவில் உள்ள வைத்தியர்கள் இருவர் தத்தமது தனியார் மருத்துவ நிலையங்கள் ஊடாக மாதாந்தம் சக்தி வாய்ந்த வலி நிவாரணி மாத்திரைகளை கொள்வனவு செய்தமை கண்டறியப்பட்டுள்ளது.

இந்த மாத்திரைகளையே தற்போது வடக்கில் இளைஞர்கள் போதைப்பொருளுக்கு பதிலாக உட்கொண்டு வருகின்றனர்.

யாழ்ப்பாணத்தில் உயிர்க்கொல்லி போதைமருந்துக்கு அடிமையானவர்கள், அது கிடைக்காத சமயங்களில் அதிசக்தி வாய்ந்த வலி நிவாரணி மாத்திரைகளை பயன்படுத்தி வருகிறார்கள்.

மிகமிக அத்தியாவசியமான சமயங்களில், அரிதான சந்தர்ப்பங்களில் வைத்தியர்களின் கண்காணிப்பில் நோயாளிகளிற்கு வழங்கப்படும் இந்த மாத்திரைகளை இளைஞர்கள் சட்டவிரோதமாக பெற்று வருகிறார்கள்.

இந்த நிலையில் மருந்து விற்பனை நிலையங்கள் மீது உணவு மற்றும் மருந்து பரிசோதகர்கள் திடீர் சோதனை நடத்தியுள்ளனர். இதன்போது இரண்டு வைத்தியர்கள் அதிகளவான சக்தி மிக்க வலி நிவாரணி மாத்திரை கொள்வனவு செய்த தகவல் வெளியாகியுள்ளது.

வலிகாமத்தில் உள்ள தனியார் வைத்தியசாலையொன்றின் வைத்தியர் ஒருவரும், வவுனியா வைத்தியர் ஒருவரும் அதிகளவான மாத்திரைகளை கொள்வனவு செய்துள்ளனர்.

வலிகாமம் தனியார் வைத்தியசாலையும் பரிசோதிக்கப்பட்டது. அந்த மாத்திரைகள் யாருக்கு விநியோகிக்கப்பட்டது என்ற பதிவுகள் அங்கிருக்கவில்லையென தெரிய வருகிறது.

யாழ்ப்பாணத்தில் உள்ள பிரபல மருந்து மொத்த விற்பனை நிலையத்தில் இருந்து வவுனியாவைச் சேர்ந்த மருத்துவர் ஒருவர் தனது தனியார் மருத்துவ நிலையத்தின் பெயரில் மாதாந்தம் 400 பெட்டி அதி சக்தி வலி நிவாரணி மாத்திரைகளை கொள்வனவு செய்துள்ளார். அவர் வவுனியாவிலுள்ள அரச மருத்துவமனை ஒன்றிலும் பணியாற்றுகிறார்.

இந்நிலையில், இவ்வளவு பெருந்தொகை போதை மாத்திரை மருத்துவ தேவைக்காக இருக்காது என மருத்துவ நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

வடக்கில் மாணவர்கள், இளைஞர்கள் ஆகியோரை இலக்கு வைத்து போதைப்பொருள் விற்பனை இடம்பெறுவதாக பலரும் சுட்டிக் காட்டி வரும் நிலையில் பொறுப்பு வாய்ந்த மருத்துவர்கள் பெருந்தொகை சக்தி மிக்க வலி நிவாரணி மாத்திரைகளை மாதாந்தம் பெற்றமை அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளதுடன், இது தொடர்பில் வடமாகாண சுகாதார சேவைகள் திணைக்களப் பணிப்பாளர் கவனம் செலுத்த வேண்டுமென கோரப்பட்டுள்ளது.

# வீட்டில் கஞ்சா செடி வளர்த்த நபர் கைது

## அம்பாறையில் 53 செடிகளும் மீட்பு



(பாறுக் ஷிஹான்)

வீடு ஒன்றின் தோட்டத்தில் சூட்சுமமான முறையில் 53 கஞ்சா செடிகளை வளர்த்து வந்த சந்தேக நபரை சவளக்கடை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

அம்பாறை மாவட்டம் சவளக்கடை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட அன்னமலை பகுதியில் கஞ்சா செடிகள் வளர்க்கப்பட்டு வருவதாக இரகசிய தகவல் ஒன்றை அடுத்து பொலிஸார் நேற்று திங்கட்கிழமை(24) தீபாவளி தினத்தன்று பொலிஸார் முற்றுகையிட்டனர்.

சவளக்கடை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியும் பிரதம பொலிஸ் பரிசோதகருமான டீ.எம்.எஸ்.கே தசநாயக்க தலைமையிலான சார்ஜன்ட்களான றவூப், ஜெசில், உவைஸ், பொலிஸ் கான்ஸ்டபிள்களான திசாநாயக்க, சம்பத், பெண் பொலிஸ் கான்ஸ்டபிள் குமாரி ஆகியோர் தேடுதல் மேற்கொண்டு சந்தேக நபரை கைது செய்தனர்.

இவ்வாறு கைதானவர் அன்னமலை பகுதியைச் சேர்ந்த 58 வயதான நபர் என்பதுடன் வீட்டின் தோட்டத்தில் உள்ள பயிர்களுடன் இணைத்து குறித்த 53 கஞ்சா செடிகளை வளர்த்து வந்துள்ளார் என பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணையில் இருந்து தெரியவந்துள்ளது.

அத்துடன், கைது செய்யப்பட்ட சந்தேக நபர் மற்றும் சான்றுப் பொருட்கள் யாவும் நீதிமன்றத்தில் பாரப்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.

## படைக் கட்டுப்பாடுகள்...

அமைச்சர்களான டக்ளஸ் தேவானந்தா, விஜேதாச ராஜபக்ஷ, அலி சப்ரி ஆகியோர் கொண்ட குழுவின் கூட்டம் இன்று ஜனாதிபதி தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த கூட்டத்தின்போதே மேற்படி மகஜரை அமைச்சர் டக்ளஸ் முன்வைக்கவுள்ளார்.

வடக்கு கிழக்கில் புனிதப்பிரதேசங்கள், பாடசாலைகள், தொல்பொருள் இடங்கள் ஆகியன படையினரின் கட்டுப்பாட்டில் இருப்பது மக்களுக்கு பெரும் பிரச்சினையாக இருப்பதாக பல தரப்பிலும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளதால் அது தொடர்பில் உடனடி நடவடிக்கை எடுத்து அந்த இடங்கள் சுதந்திரப் பகுதிகளாக அறிவிக்கப்படவேண்டுமென இன்றைய கூட்டத்தில் அமைச்சர் டக்ளஸ் கோரிக்கை விடுக்கவுள்ளாரென அறியமுடிந்தது.

அதேபோல் கைதிகளின் விடுதலை, வடக்கு மாகாணத்திற்கு புதிய ஆளுநர், இந்தியாவில் கல்வி கற்று பட்டம் பெற்றுள்ள இலங்கையருக்கு உள்நாட்டில் வேலைவாய்ப்பு, அந்த பட்டங்களை இலங்கை பல்கலைக்கழகம் அங்கீகரித்தல், மீனவர் மற்றும் விவசாயிகளின் உடனடி பிரச்சினைகள் உள்ளிட்டவையும் இன்றைய கூட்டத்தில் அமைச்சர் டக்ளஸினால் சுட்டிக்காட்டப்படவுள்ளதாக அறியமுடிந்தது.

## தமிழ் அரசியல் கைதிகள்...

தீபாவளி தினமான நேற்று (24) தமிழ் அரசியல் கைதிகள் எண்மர் நல்லெண்ண அடிப்படையில் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் தீர்மானத்துக்கமைய இவர்கள் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க மீதான கொலைக்குற்றச்சாட்டு தொடர்பில் சந்தேகத்தின்பேரில் கைதுசெய்யப்பட்டு தடுத்துவைக்கப்பட்டுள்ள மோதரை காளிகோயில் குருக்கள் ரகுபதி சர்மா உட்பட எண்மரே இவ்வாறு விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

தமிழ் அரசியல்கைதிகளான வரதராஜன், ரகுபதி சர்மா, இளங்கேஸ்வரன், நவதீபன், ராகுலன், காந்தன், சுதா, ஜெபநேசன் ஆகியோரே ஜனாதிபதி பொதுமன்னிப்பின் கீழ் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

## மீன் வெட்டியது தவறாம்...

வெட்டியது தவறு எனக்கூறி மீன் வெட்டிய கத்தியை பறித்து மனைவி மீது குத்தியுள்ளார்.

இதன்போது, மனைவியின் வயிறு, கை மற்றும் கால் பகுதிகளில் வெட்டுக் காயங்களுக்கு இலக்கான நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கொடிகாமம் தவசிகுளம் பகுதியைச் சேர்ந்த 31வயதான குடும்பப் பெண் ஒருவரே இவ்வாறு கணவனின் கத்திக் குத்துக்கு உள்ளாகியுள்ளார். இந்தத் தாக்குதல் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கொடிகாமம் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

## அத்தியாவசிய மருந்துகளுக்கு...

காயங்களுக்கான பஞ்சு, பென்டேஜ் ஆகியவை கூட பெரும்பாலான மருத்துவமனைகளில் இல்லையென அச்சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது. இதன் காரணமாக தனியார் மருந்தகங்களில் மருந்துக் கொள்வனவு அதிகரித்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரச வைத்தியசாலைகளில் மயக்க மருந்துகளுக்கு கடும் தட்டுப்பாடு நிலவுவதாக அகில இலங்கை தனியார் மருந்தக உரிமையாளர்கள் சங்கத்தின் பொருளாளர் மஞ்சுள ஜயவர்தன தெரிவித்துள்ளார்.

## நாடாளுமன்றத்தை...

அவர் மேலும் கூறுகையில்,

22ஆவது அரசியலமைப்பு திருத்தம் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளது. சபாநாயகர் கையொப்பமிட்டதன் பின்னர் அது சட்டமாக நடைமுறைப்படுத்தப்படும். யார் என்ன வாதப் பிரதிவாதங்களை முன்வைத்தாலும் அது சட்டமாக அமுலாகும்.

எனவே, இங்கு அரசியலில் ஈடுபட வேண்டும் என்ற எண்ணம் யாருக்காவது இருக்குமாக இருந்தால், அவர்களுக்கு இரட்டை குடியுரிமை இருக்கக்கூடாது. இரட்டை குடியுரிமை உள்ள நபரொருவருக்கு நாடாளுமன்றத்தில் பங்கேற்க வேண்டும் என்ற எண்ணம் இருந்தால் இரட்டை குடியுரிமையை நீக்கிக்கொள்ள வேண்டும். நாட்டை நேசிப்பவர்களாக இருந்தால், இந்த சமூகத்துக்கு சேவையாற்றும் விருப்பம் இருந்தால் இன்னொரு நாட்டின் குடியுரிமை அவசியமில்லை.

தற்போதே, மக்கள் உயிர் வாழ முடியாதளவுக்கு வாழ்க்கைச் செலவுகள் அதிகரித்துள்ளன. இதற்கு மேலதிகமாக இன்னும் சில வரிகள் அமுல்படுத்துவார்களெனில், மக்கள் மேலும் நெருக்கடிக்குள்ளாகுவார்கள். அதனால், அரசாங்கத்தின் செலவுகளை மட்டுப்படுத்த வேண்டும். நாட்டில் தற்போதுள்ள சூழ்நிலையில், 38 இராஜாங்க அமைச்சுகள் அவசியமில்லை என்றே நாங்கள் கருதுகிறோம்.

இவர்களுக்கென தனியாக நிதி செலவிடவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. இவற்றுக்கு அப்பால் நாட்டை வலுப்படுத்தக்கூடிய பொருளாதாரத்தை வலுப்படுத்தக்கூடிய ஒத்துழைப்புகளை வழங்க முடியும். அதனால், வரிகளுக்கான நிவாரணங்களை பெற்றுக்கொடுக்க வேண்டும் என்று நம்புகிறோம்.

அதேபோன்று தேர்தல்களை உரிய காலத்தில் நடத்துவதற்காக நாங்கள் போராடுவோம். உள்ளூராட்சிமன்றத் தேர்தல் மாத்திரமல்ல. ஜனாதிபதி, பொதுத் தேர்தலொன்றும் நடத்தப்பட வேண்டியது அவசியமாகும். ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க இந்த அரசாங்கத்தின் தலைவர் என்ற அடிப்படையில், நாடாளுமன்றத்தை கலைத்து தேர்தலை நடத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார்.

## கசினோக்களுக்கான...

மேலும், புதிய திருத்தங்களினால் கசினோக் களுக்கு அதிக பதிவுக் கட்டணமும், இலங்கையர் கசினோவிற்குள் நுழைவதற்கு 200 டொலர் கட்டணமும் விதிக்கப்படும் என எதிர்பார்ப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

ஏனைய பந்தயம் மற்றும் விளையாட்டுகளுக்கான வரியை உயர்த்தவும் முடிவு செய்யப்பட்டுள்ளது. இதன் மூலம் நேரடி பந்தய மையங்களின் ஆண்டு வரியை ரூ.6 இலட்சத்தில் இருந்து குறைந்தது ரூ.10 இலட்சமாகவும், அதற்கென விதிக்கப்படும் 10 சதவீத வரியை குறைந்த பட்சம் 15 சதவீதமாகவும் உயர்த்த முடிவு செய்யப்பட்டுள்ளது.

பந்தய துணை முகவர்களுக்கான வருடாந்த வரியை 40 இலட்சம் ரூபாவிலிருந்து குறைந்தது 50 இலட்சம் ரூபாவாக அதிகரிப்பது, நேரடி பந்தயம் அல்லாத சந்தைகளுக்கான வருடாந்த வரியை 50 ஆயிரம் ரூபாவிலிருந்து 75 ஆயிரம் ரூபாவாக அதிகரிப்பது போன்ற திருத்தங்கள் இதன் கீழ் கொண்டுவரப்படும் என எதிர்பார்க்கப்படுவதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## 08 மாதங்களில் 7,568...

இதேவேளை, பெரும்பாலான குற்றங்கள் தொடர்பில் முறைப்பாடுகள் கிடைக்கப்பெறாமை மற்றும் போதியளவு ஆதாரங்கள் இல்லாமை காரணமாக சட்ட நடவடிக்கை எடுக்க முடியாதுள்ளதாகவும் சபையின் தலைவர் மேலும் தெரிவித்துள்ளார்.

சிறுவர் துன்புறுத்தல் தொடர்பாக தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் 1929 என்ற துரித இலக்கத்துக்கு அழைத்து முறைப்பாடுகளை பதிவுசெய்ய முடியும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## அரசியலமைப்பு...

தேசிய மக்கள் சக்தியின் மஹரகம தேர்தல் தொகுதியின் கூட்டம் நேற்று முன்தினம் இடம்பெற்றது. அதில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

புதிய அரசியலமைப்பொன்று நாட்டுக்கு மிகவும் அவசியமானதாகும். தற்போது நடைமுறையிலுள்ள அரசியலமைப்பினூடாக மக்களின் உரிமைகளையோ, நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கோ, சிங்கள, தமிழ் மற்றும் முஸ்லிம் மக்களுக்கிடையிலான நல்லிணக்கத்துக்கோ, சட்ட ஆட்சியை உருவாக்கும் நடவடிக்கைகளோ இதுவரையில் இடம்பெறவில்லை. 22ஆவது அரசியலமைப்பு திருத்தம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டபோது, மூன்று திருத்தங்களுக்கான யோசனைகளை முன்வைத்திருந்தோம். அதாவது, நாட்டு மக்களின் பாதுகாப்பு மற்றும் நிறைவேற்று அதிகாரம் என்பன மக்களால் தெரிவுசெய்யப்பட்ட ஜனாதிபதியினாலே நிறைவேற்றப்படுகின்றது. ரணில் விக்ரமசிங்க மக்களால் தெரிவு செய்யப்பட்டவர் இல்லை. அவர் கொழும்பு மாவட்ட மக்களால் நாடாளுமன்றத்துக்கே தெரிவு செய்யப்பட்டார். ஆனால், அவர் இன்று பாதுகாப்பு அதிகாரம், நிறைவேற்று அதிகாரம் என்பவற்றை தன்னகத்தே வைத்துள்ளார். அதன் காரணமாகவே, ஜனாதிபதி பதவியில் வெற்றிடம் ஏற்படுமாக இருந்தால் நாடாளுமன்றத்தினூடாக ஜனாதிபதியொருவரை தெரிவு செய்ய முடியும். ஆனால் அவரின் பதவிகாலம் ஆறு மாதமாக இருக்க வேண்டும் என்றும், குறித்த ஆறு மாதத்துக்குள் ஜனாதிபதி தேர்தல் நடத்தப்படவேண்டுமென திருத்தம் மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் வலியுறுத்தியிருந்தோம்.

எமது அரசியலில் கட்சி தாவுதல் பல்வேறு சர்ச்சைகளை ஏற்படுத்தியுள்ளன. உதாரணத்துக்கு குறிப்பிட்டால், விஜேதாச ராஜபக்ஷ, சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவிடமிருந்து தேர்தலில் போட்டியிட்டு, பின்னர் மஹிந்த ராஜபக்ஷவுடன் இணைந்தார். பின்னர் ரணிலிடம் சென்றார். மைத்ரியிடம் சென்றார். பின்னர் அங்கிருந்து வெளியேறினார். அதன் பின் கோட்டாவிடம் சென்றார். அங்கிருந்தும் வெளியேறி தற்போது ரணிலுடன் இணைந்து செயற்படுகிறார். நாளை எங்கு செல்வார் என்று கூற முடியாது.

இந்தக் கட்சி தாவுதலே எமது அரசியலை மிகவும் மோசமான சீரழிவுக்கு உள்ளாக்கியுள்ளது. அதன்காரணமாகவே, கட்சி தாவுதல் மேற்கொண்டால் நாடாளுமன்ற உறுப்புரிமையிலிருந்து நீக்கப்பட வேண்டும் என்ற திருத்த யோசனையை முன்வைத்திருந்தோம். ஆனால், இந்த திருத்தத்துக்கு நாடாளுமன்றத்தில் அனுமதி கிடைக்கவில்லை. அதற்கு காரணம், சபையில் இருக்கும் அனைவரும் கட்சிக்கு கட்சி தாவுபவர்கள் என்பதாலேயே இதற்கு அனுமதி வழங்கப்படவில்லை.

அதேபோன்று, அமைச்சரவைக்கு அதிகபட்சம் 25 அமைச்சர்களும், 25 பிரதியமைச்சர்களுமே நியமிக்கப்பட வேண்டும். இராஜாங்க அமைச்சர்கள் அவசியமில்லை என்று குறிப்பிட்டிருந்தோம். மக்கள் இவ்வாறான திருத்தங்களுக்கு ஆதரவளித்தாலும் நாடாளுமன்றத்தில் இருப்பவர்கள் இவ்வாறான திருத்தங்களை ஆதரவளிப்பதில்லை.

எனவே, சிறந்த ஆரோக்கியமான ஆட்சி முறைக்கு தேவையான எந்தவொரு மறுசீரமைப்பு நடவடிக்கைகளும் இடம்பெறப்போவதில்லை என்பதை நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும்.

நாடாளுமன்றத்தில் புதிய அரசியலமைப்பு பற்றி பேசுவது நகைச்சுவைக்குரிய விடயமாகும். இந்த நாடாளுமன்றத்தினால் தற்போது நடைமுறையிலுள்ள அரசியலமைப்பில் கூட மக்கள் நலன்சார்ந்த திருத்தத்தை கொண்டுவர முடியாது. எனவே, இந்த நிலைமையில் மாற்றம் ஏற்படவேண்டுமாயின் நிறைவேற்று அதிகாரம் இல்லாத புதிய அரசியலமைப்பொன்று உருவாக்கப்பட வேண்டும்.

# சம்பந்தன் அரசியலை விட்டு விலகினால்தான் தீபாவளி!

## காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் வவுனியாவில் தெரிவிப்பு



காணாமல் போன பிள்ளைகளுக்கு முடிவின்றி எமக்கு தீபாவளி இல்லை என காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் நேற்று தெரிவித்தனர்.

வவுனியாவில் பிரதான தபாலகத்திற்கு அருகாமையில் போராட்டத்தில் ஈடுபட்டுவரும் வடக்கு கிழக்கில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் தீபாவளி திருநாளான நேற்று தமது பிள்ளைகளும் உறவுகளும் காணாமல் ஆக்கப்பட்ட நிலையில் அவர்களுக்கான நீதி கோரி கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதன்போது கருத்து தெரிவித்த சங்கத்தின் செயலாளர் கோ. ராஜ்குமார்,

நமது சைவ சமயத்தில், இது கிருஷ்ணர் மற்றும் தேவி சத்யபாமாவின் அரக்கன் நரகாசுரனை வென்றதாக கொண்டாடப்படுகிறது.

ஆனால், உண்மையில் கடந்த காலத்தில் தமிழர்களை கொன்ற அரக்கர்கள் இறந்த இந்த நாளை நாம் கொண்டாடுகிறோம். அவர்களில் சிலரை நாம் பட்டியலிடலாம். ஆனால், நமக்கு சுதந்திரம் கிடைத்ததும், நாம் அனைவரும் இந்த தீயவர்கள் பட்டியலை உருவாக்குவோம் .

வருங்காலத்தில், தமிழர்களைக் கொன்ற அரக்கர்களை, குறிப்பாக 2009ஆம் ஆண்டு அரக்கர்களையும், நமது சுதந்திரப் போரை முறியடிக்க உதவிய தமிழ் அரக்கர்களையும் நினைவுகூரும் இந்நாளை தமிழர்களாகிய நாம் கொண்டாடுவோம்.

இந்த நாள், பேய்களை வென்றதைக் கொண்டாடும் நாள். தமிழர்களுக்கு என்ன வேண்டும் என்பதை தீர்மானிக்கும் ஐ.நா-வின் கண்காணிப்பில் பொது வாக்கெடுப்பு நடத்துவதன் மூலம் மட்டுமே இந்த நாளை நாம் எதிர் காலத்தில் சுதந்திரமாகவும் மகிழ்ச்சியாகவும் கொண்டாட முடியும்.

தமிழ் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் கடந்த 13 வருடங்களாக எமது தமிழ் தேசியத்தை கொன்று குவித்த பேய்கள். அவர்கள் ஒருபோதும் அரசியல் தீர்வைக் கேட்கவில்லை, சிங்களவர்கள் தீர்வை வழங்குவார்கள் என்று காத்திருப்பதாக அவர்கள் கூறினார்கள்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எங்களை முட்டாளாக்கி, ஒவ்வொரு முறையும் அடுத்த தீபாவளிக்கு தீர்வைப் பெற்றுத் தருவோம் என்று கூறியது.

தமிழர் தாயகத்தில் விகாரைகளை கட்டுவதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, சிங்களவர்களுக்கு உதவியது. பௌத்தத்தை தேசிய மதமாக அங்கீகரிக்க ஒப்புக்கொண்டனர். தமிழர்களின் புராதன நிலமான நெடுங்கேணியை 4000 சிங்களக் குடும்பங்களுக்கு அவர்கள் ஒப்படைத்தனர். இந்தப் பழி செல்வம் மற்றும் சுமந்திரன் மீதுதான்.

நெடுங்கேணியில் சிங்களக் குடியேற்றத்தின் விளைவே குருந்தூர் மலை பிரச்சினைக்கு காரணம்.

நல்லாட்சிக் காலத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தமிழர் தாயகத்தில் 1000 பௌத்த விகாரைகளைக் கட்டுவதற்கு பட்ஜெட்டில் வாக்களித்தது.

தமிழர்களின் பிரதிநிதிகள் என்ற முறையில் அவர்கள் செய்த சேதங்கள் பலவற்றை நாம் அவற்றை பட்டியலிடலாம்.

சம்பந்தன் தலைமையில் தமிழர்கள் சர்வதேசத்தில் பலவீனப் படுத்தப்பட்டனர். இவர் சர்வதேச விசாரணையை அடியோடு அழித்தவர். அமெரிக்காவையும் சர்வதேச மத்தியஸ்தத்தையும் அழித்தவர். தமிழர்கள் சிதைக்கப்பட்டனர். அடிமைகளாக மாறினர். தமிழ் இளைஞர்கள் போதைப்பொருளால் அழிக்கப்படுகிறார்கள், தமிழ்ப் பெண்கள் இன்னமும் பாலியல் துன்புறுத்தலுக்கு ஆளாகிறார்கள். எங்கள் நிலங்கள் சிங்களர்களால் கைப்பற்றப்பட்டன. சைவ கோவில்கள் அழிக்கப்பட்டு பௌத்த விகாரைகள் அமைக்கப்பட்டன.

எமது விடுதலைப் போராட்டத்தை அழிக்க இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இரகசியமாக சம்பந்தன் உதவினார்.

வயது முதிர்ந்த இயலாத நிலையில் இருந்த போதும், சில இளையவர்களுக்கு எம்.பி. பதவியை வழங்க சம்பந்தன் விரும்பவில்லை. இந்த மனிதன் நம்மிடையே ஓர் அரக்கன். இவர் தமிழ்த் தேசிய கூட்டமைப்பினருடன் அரசியலை விட்டு வெளியேறினால் எதிர்காலத்தில் தீபாவளியை அனைவரும் கொண்டாடுவோம். சம்பந்தனும் தமிழ் தேசியக் கூட்டமைப்பு எம்.பி.க்களும் தமிழர்களின் அரக்கர்கள். புதிய தலைமுறை தமிழ் தேசப்பற்றுள்ள அரசியல்வாதிகளால், இந்த அரக்கர்கள் அரசியலில் இருந்து வெளியேற்றப்பட்டால் நாம் சந்தோஷமாக தீபாவளியை கொண்டாடுவோம் .

புதிய தலைமுறை தமிழ் அரசியல்வாதிகள், போஸ்னியா, கொசோவா, கிழக்கு திமோர் மற்றும் சூடான் போன்ற பிற நாடுகளில் இருந்து சுதந்திரத்தைப் பெறுவதற்காக கடின உழைப்பை அவர்களிடமிருந்து கற்று, இதே உத்தியை பயன்படுத்தி எமது சுதந்திரத்தை அடைய வேண்டும்.

அரசியலில் இந்தத் தமிழ்ப் பேய்களும் அரக்கர்களும் இல்லாமல் இன்னொரு இனிய தீபாவளியைக் கொண்டாடுவோமாக என்று தெரிவித்தார்.



இலங்கை இஹ்திஹாத் அஹ்லுஸ் ஸுன்னத்தி அமைப்பின் மீலாத் விழா நிகழ்வு கொழும்பு பம்பலப்பிட்டி கொத்தலாவல ஒழுங்கை ஸாவியாவில் தலைவர் டொக்டர் பஹ்மி இஸ்மாயில் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் உம்மு ஸாவியா பிரதம இமாம் கலீபதுஷ்ஷாதுலி மௌலவி எம்.எஸ்.அஹம்மத் (மஹ்ழரி) சிறப்புப் பேச்சாளராகக் கலந்துகொண்டார். இதன்போது ஸுப்ஹான் மௌலித் மஜ்லிஸும் இடம்பெற்றது. (படங்கள் - பேருவளை பீ.எம்.முக்தார்)

# மசாஜ் செய்வித்த பிக்கு கைது

காலி பிரதேசத்திலுள்ள விகாரையொன்றில் மூன்று சிறார்களை துஷ்பிரயோகம் செய்த சம்பவம் தொடர்பில் அங்குள்ள சிரேஷ்ட பிக்கு ஒருவர் கைதுசெய்யப்பட்டு நீதிமன்றில் முன்னிலைப் படுத்தப்பட்டுள்ளார்.

சிறு பிக்கு உள்ளிட்ட மூன்று சிறார்களையும் தனது உடலை மசாஜ் செய்ய மூத்த பிக்கு நிர்ப்பந்திக்கும் சம்பவம் தொடர்பில் பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டின் அடிப்படையில் இவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

அங்கு நடத்தப்பட்ட விசாரணைகளின்படி, சம்பவத்துடன் தொடர்புடையவர் என்ற சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்ட பிக்கு தெரணகம நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக சமூக வலைத்தளங்களில் பரவி வரும் காணொளியில் ஒரு மூத்த பிக்கு, இரண்டு சிறு குழந்தைகள் மற்றும் ஒரு சிறு பிக்கு ஆகியோரைக் கொண்டு தனது உடலை மசாஜ் செய்ய வைப்பது பதிவாகியுள்ளது. இதேவேளை, வாக்குவாதத்தில் ஈடுபட்டபோது சிறுவன் ஒருவரின் முகத்தில் மூத்த பிக்கு அடிப்பதையும் இக்காணொளி காட்டுகிறது. இது தொடர்பில் மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன.

# யாழில் களையிழந்த தீபாவளி வியாபாரம்





தீபாவளிப் பண்டிகை நேற்றுக் கொண்டாடப்பட்ட நிலையில், யாழ்ப்பாண நகரப்பகுதியில் பொதுமக்களின் நடமாட்டம் குறைவாகவே காணப்பட்டது.

ஒவ்வொரு வருடமும் தீபாவளிப் பண்டிகை நாளின் போது மக்கள் கூட்டத்தால் யாழ். நகரம் நிரம்பி வழியும் நிலையில், நேற்று மக்கள் நடமாட்டம் குறைந்தே காணப்பட்டது.

புடவைக் கடைகள் மற்றும் ஏனைய கடைகளிலும் பொதுமக்களின் வரவு குறைவாகக் காணப்பட்டது. அத்துடன் அங்காடி வியாபாரமும் எதிர்பார்த்த அளவுக்கு களைகட்டவில்லையென வியாபாரிகள் விசனம் தெரிவித்தனர்.

# இஸ்லாமிய சமூகம் கல்வியில் முன்னேற வேண்டும்; அதற்காக பிள்ளைகளைத் தயார்படுத்துதல் தேவை

## வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி தெரிவிப்பு





(அஷ்ரப் ஏ.சமத்)





ஏழைகள் எனச் சொல்லிக் கொண்டு பொருட்களைப் பகிர்ந்தளிக்கும் சம்பிரதாயத்தினை விட்டு நாமும் முன்னேறுதல் வேண்டும். அதற்கு நமக்குள்ள ஒரே வழி கல்வியே. அதில் முன்னேறுதல் வேண்டும். அதற்காக நமது பிள்ளைகளை இன்றிலிருந்தே நாம் தயார்படுத்த வேண்டும் என வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி தெரிவித்தார்.

கொழும்பு-10 மருதானை அல்-ஹிதாயா பாடசாலையின் 92ஆவது ஆண்டு விழாவும் ஸ்மார்ட் வகுப்பறை ஒன்றின் திறப்பு வைபவமும் கடந்த வெள்ளிக்கிழமை அல்-ஹிதாயா பாடசாலையின் புர்ஹார்தீன் மண்டபத்தில் நடைபெற்றது. இவ்விழாவுக்கு பிரதம அதிதியாக வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான அலி சப்ரி கலந்துகொண்டார்.

இந்நிகழ்வு கல்லூரியின் உப அதிபர் திருமதி ஏ.ஏ.சி.கே. அபேசிங்க தலைமையில் நடைபெற்றது. கல்லூரியின் பழைய மாணவர்கள் சங்கம் இந்நிகழ்வினை ஏற்பாடு செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது. வெளிநாட்டு அமைச்சரின் வேண்டுகோளின்படி கல்வியமைச்சு இக் கல்லூரிக்கு ஸ்மார்ட் கணினி வகுப்பறை ஒன்றை நிறுவியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றும்போதே வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்தும் உரையாற்றுகையில் தெரிவித்தாவது,

ஜப்பான் நாட்டில் ஏழை ஒருவருக்கு ஒருபோதும் உணவுக்காக மீனை வழங்கமாட்டார்கள். மீனை அவர் நாளாந்தம் தேடிப் பிடித்து உண்பதற்காக ஒரு மீன் பிடிக்கும் துண்டிலையே வழங்குவார்கள். அதனால்தான் அந்த நாடு தற்பொழுது வளர்ச்சி கண்டுள்ளது. 50 வருடங்களுக்கு முன் கொரியா மிகவும் ஏழ்மையாக இருந்துவந்த நாடு. தற்பொழுது அந்நாடு பொருளாதாரத்தில் உலகில் உள்ள நாடுகளில் 7ஆவது இடத்தில் உள்ளது. இந்தியாவிலும் கூட 1991ஆம் ஆண்டு திறந்த பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பினார்கள். அப்போது பிரதமராக இருந்த மன்மோகன் சிங் அதனைக் கட்டியெழுப்பினார். அரசுகள் மாறினாலும் அவர்களது கல்வி, பொருளாதார முறைமைகள் அங்கு மாறவில்லை. அதனாலேயே அவர்கள் 5ஆவது இடத்தில் உள்ளார்கள். நமது நாட்டில் காலத்திற்கு காலம் அரசியல் ஆட்சி முறைமைகள் மாறும்போது நமது தேவைக்காக திட்டங்களை மாற்றிவருகின்றோம்.

அண்மையில் இரண்டு முறை சவூதி அரேபியாவின் வெளிநாட்டு அமைச்சரைச் நான் சந்தித்தேன். அவர்கள் தற்பொழுது சவூதி அரேபியாவின் எதிர்காலத் திட்டத்திற்காக 4 முன்மாதிரித் திட்டங்களை அறிமுகப்படுத்தி அந்த நாட்டினைக் கட்டியெழுப்ப உள்ளார்கள். அந்த நாட்டில் அடுத்த சில வருடங்களுக்குள் பெற்றோல் அறவே இல்லாமல் போய்விடும். அதற்காக சவூதி அரேபியாவை ஒரு நவீன முன்மாதிரியான சுபீட்சத்திற்கு கட்டியெழுப்ப உள்ளார்கள்.

அங்கு பெண்கள் தாமாகவே சொந்தக் காலில் நிற்பதற்காக அவர்களுக்கு உரிமைகளை வழங்கி வருகின்றார்கள். பெண்கள் முகம் மூடுதல், அபாயா அணிதல் போன்ற கட்டாயங்கள் தளர்த்தப்பட்டு வருகின்றன. அவர்கள் சுயமாகவே தமது உணவு, பொருளாதாரம், கல்வி கற்றல் போன்ற விடயங்களுக்கு முன்னுரிமை அளித்துள்ளார்கள். இஸ்லாம் மார்க்கத்தின் சில கட்டாயத் தளர்வுகளை தளர்த்தி வருகின்றார்கள். மேலும், ஷியா முஸ்லிம், ஸுன்னி முஸ்லிம் போன்ற பிளவுகளைத் தடுத்து ஒற்றுமையினைக் கட்டியெழுப்பி தேசிய ஒற்றுமையை கொண்ட ஒரு நாடாக எதிர்காலத்தில் சவூதி அரேபியாவைக் கட்டி எழுப்பவுள்ளதாக அந்நாட்டு வெளிவிவகார அமைச்சர் என்னிடம் தெரிவித்தார்.

எமது நாட்டில் பொருளாதாரக் கஷ்டத்திற்காக இலங்கை மத்திய வங்கியின் இலங்கைப் பணத்தினை அச்சடித்து வெளியிட்டதாலேயே நாம் மிகவும் பின்தங்கியுள்ளோம். டொலரின் பெறுமதி நூற்றுக்கு நூறு வீதம் அதிகரித்துள்ளது. மேலும், ஒன்றரை வருடங்களாவது நாம் பொருளாதாரத்தில் கஷ்டங்களை அனுபவிக்க வேண்டிவரும். ஆகவேதான் இந்த நாட்டில் மதவாதம், இனவாதம் போன்ற பாகுபாடுகள் இல்லாமல் சகலரும் ஒன்றிணைந்து ஒரு கொள்கையின் கீழ் இந்த நாட்டினைக் கட்டியெழுப்புதல் வேண்டும்.

இக்கல்லூரியை கட்டியெழுப்புவதற்காக பழைய மாணவர்கள் சங்கம் முன்வந்துள்ளது. பழைய மாணவர்கள் சங்கத்தின் முன்னாள் தலைவர் புர்கானுத்தின் ஹாஜியார் இன்றும் ஓர் அல் - ஹிதாயா பழைய மாணவன் என்ற நிலையில் இக் கல்லூரிக்காக அவரது சொந்தப் பணத்தினை செலவளித்து கூட்ட மண்டபமொன்றினை நிர்மாணித்துக் கொடுத்துள்ளார். அதற்காக நாம் நன்றியைச் செலுத்துகின்றோம்.

இதேபோன்று கொழும்பு மாவட்டத்தில் வாழும் முஸ்லிம் பாடசாலைகளது கல்வி வளர்ச்சிக்கும் பழைய மாணவர்கள் தமது பொருளாதாரம் மற்றும் உழைப்புகளை செலவளித்து எதிர்கால சமூகத்திற்காக தாம் கற்ற கல்லூரியைக் கட்டியெழுப்பும் விடயத்தில் முன்னின்று உழைக்கின்றனர். இவ்விடயம் சாலச் சிறந்தாதாகும் என்று குறிப்பிட்டார்.

# ரயில் பாதையில் இடிந்து விழுந்த குப்பை மேடு

## மூன்று மணிநேரம் போக்குவரத்து பாதிப்பு



(க.கிஷாந்தன்)

மலையக புகையிரதப் பாதையில் ஹட்டன் புகையிரத நிலையத்தை அண்மித்த புகையிரதப் பாதையில் நேற்றுக் காலை பாரிய குப்பை மேடொன்று சரிந்து விழுந்ததாக ஹட்டன் புகையிரத நிலையப் பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

ஹட்டன் மற்றும் கொட்டகலை ஆகிய புகையிரத நிலையங்களுக்கிடையில் ஹட்டன் புகையிரத நிலையத்திற்கு அருகாமையில் இந்த குப்பைகள் அடங்கிய மண்மேடு சரிந்து வீழ்ந்ததன் காரணமாக நானு-ஓயவிலிருந்து ஹட்டன் நோக்கிப் பயணித்த சரக்கு புகையிரதம் மண்மேட்டில் மோதி இவ்வாறு விபத்துக்குள்ளானதாக தெரிவிக்கப்பட்டது.

புகையிரதப் பாதையில் இடிந்து விழுந்த குப்பை மேட்டை புகையிரத பராமரிப்புப் பணியாளர்கள் அகற்றிய பின்னர், நேற்று (24) காலை 08.30 மணியளவில் மலையக புகையிரத சேவை மீண்டும் வழமைக்கு கொண்டுவரப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

**வெற்றி நிச்சயம்**

**"உங்கள் பிரச்சினை எதுவானாலும் ஒருமுறை என்னைத் தொடர்புகொண்டால் 100% வெற்றி நிச்சயம்." நடக்காத காரியங்களையும் நடத்தி வைக்கும் சக்தி என்னிடம் மட்டுமே உண்டு. என்னை நம்புங்கள். பணப் பிரச்சினை, தொழில் முடக்கம், வியாபார மந்தம், கடன், முன்னேற்றத்தடை, எதிலும் தோல்வி, தீராத நோய், போதைவஸ்துப்பாவனை, வழக்கு, விற்கப்படாத வீடு/காணி, வாகனம் விற்க, வெளிநாடு செல்ல,கொடுத்த பணம் திரும்பிவர, கணவன்-மனைவி பிரச்சினை, விவாகரத்தை தடுக்க, காதல், மனங்கவர்ந்தவரை வசமாக்கிக்கொள்ள, பிரிந்தவர் ஒன்றுசேர, திருமணத்தடை, குழந்தையின்மை மற்றும் உங்கள் சகல பிரச்சினைகளுக்கும் 48 மணித்தியாலத்திற்குள் 100% நிரந்தரத்தீர்வு. இது சத்தியம்.**

**உலகப்புகழ் பெற்றவரும் இலங்கையில் நம்பர்-1 மலையாள மாந்திரீக ஜாம்பவான், மனோதத்துவ நிபுணர், தத்துவஞானி, மகரிஷி, தேசபந்து கௌரவ கலாநிதி ஸ்ரீமத் சுவாமிஜி -0710192687**

eba jb . h t hh

தமிழன்
THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்
இல. 91, விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42,
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 077 172 1880
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com

**2022, ஒக்டோபர் 25ஆம் திகதி, செவ்வாய்க்கிழமை**

# முன்னுதாரணம் தரும் பாகிஸ்தானின் தீர்ப்பு

**பாகிஸ்தானில் அரசியல் குழப்பம் உச்சக்கட்டத்தை எட்டியுள்ளது. அந்நாட்டின் முன்னாள் பிரதமர் இம்ரான் கான், அந்நாட்டின் தேர்தல் ஆணையத்தால் தகுதி நீக்கம் செய்யப்பட்டுள்ளார்.**

**பனாமா ஆவணங்கள் தொடர்பான வழக்கில் தண்டனை விதிக்கப்பட்டதைத் தொடர்ந்து நவாஸ் ஷெரீப் பதவியில் இருந்து தகுதி நீக்கம் செய்யப்பட்ட ஐந்து ஆண்டுகளுக்குப் பிறகு பாகிஸ்தான் உயர்நீதிமன்றம் இம்ரானின் மனுக்களை விசாரணைக்கு எடுத்துக் கொண்டது.**

**இம்ரானுக்கு எதிரான புகார் என்னவென்றால், அவர் பதவியில் இருந்தபோது பெற்ற பல பரிசுகளை அரச திறைசேரியில் ஒப்படைக்காமல், சட்டவிரோதமாக விற்றார் என்பதாகும். சவூதி அரேபிய பட்டத்து இளவரசர் அவருக்கு பரிசளித்த கடிகாரங்கள், ரோலக்ஸ் கைக்கடிகாரங்கள், விலையுயர்ந்த கஃப்லிங்க்ஸ், மதிப்புமிக்க பேனா மற்றும் மோதிரம் உள்ளிட்டவை அந்த பொருட்களில் அடங்கும்.**

**இம்ரான் உத்தியோகபூர்வமாக பணம் பெற்றதால் இந்த விற்பனை சட்டவிரோதமானதல்ல என்றாலும், பாகிஸ்தான் தேர்தல் ஆணையம் (ECP), விற்பனை செய்ததையோ அல்லது அதன் மூலம் பெறப்பட்ட பணத்தையோ அறிவிக்காததற்காக அவரைத் தகுதி நீக்கம் செய்துள்ளது. உயர் பதவியில் இருப்பவர் தனிப்பட்ட இலாபத்திற்காக இத்தகைய பொருளை விற்பதில் முறைகேடுகள் அதிகமாக உள்ளன என அந்நாட்டு சட்டவிதிகள் கூறுகின்றன.**

**2016ஆம் ஆண்டு நவாஸ் சொத்துக்களை அறிவிக்காததால் பிரதமர் பதவியில் இருந்து நீக்கப்பட்டார். ஏனெனில், பிரதமர் என்பவர் புத்திசாலித்தன்மையுடன், நேர்மையாகவும் இருக்க வேண்டும் என்பது அந்நாட்டின் அரசியல் சாசன விதி. இதனால் நவாஸை, தற்போதைய தலைமை நீதிபதி உமர் அட்டா பண்டியல் அடங்கிய ஐந்து நீதிபதிகள் கொண்ட அமர்வு அவரை பின்னர் வாழ்நாள் தகுதி நீக்கம் செய்தது.**

**இந்தக் குற்றச்சாட்டுக்கு எதிராக இம்ரான் கானின் வழக்குரைஞர்கள் மேல்முறையீடு செய்யவுள்ளனர். இதற்கிடையில் இம்ரான் கான் தகுதி நீக்கத்துக்கு எதிராக பாகிஸ்தானில் எதிர்ப்புக் கிளம்பியுள்ளது.**

**மேலும், இம்ரான் எவ்வளவு காலத்திற்கு தகுதி நீக்கம் செய்யப்பட்டார் என்பது இன்னும் தெளிவாகத் தெரியவில்லை, ஆனால், அவர் வென்ற நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை இழக்கிறார்.**

**கடந்த ஏப்ரல் மாதத்தில் இம்ரானும் அவரது பெரும்பாலான கட்சி உறுப்பினர்களும் அவர் பிரதமர் பதவியிலிருந்து நீக்கப்பட்டதற்கு எதிர்ப்புத் தெரிவித்து, நாடாளுமன்றத்தில் இருந்து இராஜினாமா செய்ததாக அறிவித்தனர்.**

**இதில் 8 இடங்களில் கடந்த வாரம் தேர்தல்கள் நடத்தப்பட்டன. இதற்கிடையில் இம்ரான் கான் வெளியேற்றப்பட்ட பின்பு அவரது புகழ் அதிகரித்துவருகிறது. ஏனெனில், 7 தொகுதிகளில் போட்டியிட்டு 7ஐயும் அவர் வென்றுள்ளார்.**

**தேர்தல் வெற்றிகள் இம்ரானுக்கு தனது வாய்ப்புகள் மீது மேலும் நம்பிக்கையை ஏற்படுத்தியது. 2016ஆம் ஆண்டில், இம்ரான் தனது ஆதரவாளர்களால் இஸ்லாமாபாத்தை முற்றுகையிடப்போவதாக அச்சுறுத்திய பின்னரே உயர்நீதிமன்றத்தில் தனது வழக்கை விசாரிக்கப் பெற்றார். இம்முறை இம்ரான் பக்கம் இராணுவம் இல்லை. ஆனால், அவர் தனது பிரபலத்தின் மீது சவாரி செய்ய முடியும் என்று நம்புகிறார். ஆணையத்தின் தீர்ப்பைத் தொடர்ந்து, மக்கள் தங்கள் வீடுகளை விட்டு வெளியே வந்து தீர்ப்புக்கு எதிர்ப்பு தெரிவிக்கும்படி கேட்டுக் கொண்டார் இம்ரான்.**

**குறைந்தபட்சம் தற்போதைக்கு பாகிஸ்தான் தேர்தல் ஆணையத்தின் தீர்ப்புக்கு அவர் அளித்த முதல் பதில், மக்கள் தங்கள் வீடுகளை விட்டு வெளியே வந்து தீர்ப்புக்கு எதிர்ப்பு தெரிவிக்கும்படி கேட்டுக் கொண்டதாகும்.**

**பாகிஸ்தான் இராணுவம் தற்போது மேலிடத்தில் மாற்றத்திற்கு தயாராகி வருகிறது. இம்ரான் கான் வெளியேற்றப்பட்டதற்குப் பின்னால் ஒரு முக்கிய நிகழ்வாக ஜெனரல் கமர் ஜாவேத் பஜ்வா நவம்பர் இறுதியில் ஓய்வு பெறுகிறார். மறுபுறம், இம்ரான் கான் தனது சாத்தியமானவர்களுடன் தொடர்பில் இருக்கிறார். இராணுவத்தின் ஒத்துழைப்பின்றி இம்ரானால் நகர்வுகளை மேற்கொள்வது கடினமானதாக இருக்கப்போகிறது.**

**பாகிஸ்தான் தொடர்பில் உலக நாடுகளில் பல்வேறு விமர்சனங்கள் இருந்தாலும் மேற்கண்ட செயற்பாடுகள் இலங்கை உட்பட்ட தெற்காசியாவின் நாடுகளுக்கு நல்லதொரு உதாரணம். பதவியிலிருந்து போகும்போது அரசுக்குக் கிடைத்த பரிசுப்பொருட்களை தங்களுடன் எடுத்துச் சென்ற தலைவர்கள் பலர் இருக்கின்றனர். இவ்வாறான தீர்ப்புகள் இங்கும் கிடைக்குமானால் பலர் அரசியலுக்கே ஆயுள் முழுவதும் வர முடியாமல் போய்விடும். சட்டத்துறையில் இருப்பவர்கள், நல்லாட்சி விரும்பிகள் பாகிஸ்தானின் இந்த தீர்ப்பை கவனத்தில் கொள்ளவேண்டும்.**

## இலங்கையில் கடலட்டைப் பண்ணையில்

# சீனாவின் முதலீடு

## இந்திய பாதுகாப்புக்கு அச்சுறுத்தலா?

பீப்பாய் வடிவ ஹோலோதுரைடியா (Holothuroidea) பொதுவாக கடலட்டைகள் என்று அழைக்கப்படும் எக்கினோடெர்ம்ஸ் (Echinoderms) எனப்படும் ஒரு பெரிய விலங்கு இனத்தின் ஒரு பகுதியாகும், இதில் நட்சத்திர மீன்களும் கடல் ஊமத்தைகளும்/கடற்பிரட்டைகளும் (sea urchins) உள்ளடங்கும். அனைத்து கடலட்டைகளும் கடலில் வாழ்பவை, சில ஆழமற்ற பகுதிகளில் வாழ்கின்றன, மற்றவை ஆழமான கடலில் வாழ்கின்றன. உலக சமுத்திரத்தில் 1,000 இற்கும் மேற்பட்ட கடலட்டை இனங்கள் வாழ்ந்து வருகின்றன. ஆனால், ஏறத்தாழ 24 வகையான கடலட்டை இனங்களே வணிக ரீதியில் முக்கியமானவை.

கடலட்டைகள் வணிக ரீதியில், மிக உயர்ந்த மதிப்புள்ள கடல் உணவுகளில் ஒன்றாகும். கடலட்டையானது ஊட்டச்சத்து மதிப்பு மற்றும் சுவை மிக்க உணவாகக் கருதப்படுகின்ற காரணத்தினாலும் தென்கிழக்கு ஆசிய பிராந்தியத்தில் உணவாகப் பயன்படுத்தப்படுகின்ற ஒரு நீண்ட வரலாற்றைக் கொண்டுள்ளது. சில நாடுகளில், மருந்துகள் தயாரிக்கப்படுகின்றன. உதாரணமாக, மலேசியாவில் 'காமட் (gamat) எண்ணெய்' ஆகும். மிக முக்கியமான கடலட்டை தயாரிப்பு உலர்ந்த உடல் சுவர் ஆகும். இது பெச்-டெ-மெர் (bêche-de-mer) ட்ரிபாங் (trepang) அல்லது ஹைசொம் (haisom) என சந்தைப்படுத்தப்படுகின்றது.

இலங்கையில் கடலட்டை பண்ணைகள் மிகவும் பழமையானது. இது சீனர்களால் அறிமுகப்படுத்தப்பட்டது. பண்டைய 'பட்டுப்பாதை' (silk route) வழியாக வர்த்தகம் நடைபெற்ற போது, பல நூற்றாண்டுகளாக சீனாவிற்கு எடுத்துச் செல்லப்பட்ட முக்கிய பொருட்களில் ஒன்றாக கடலட்டை இருந்ததாக கருதப்படுகின்றது. ஆனால் விலை அதிகரிப்பு காரணமாக கடலட்டைக்கான கேள்வி/ தேவை மிகவும் அதிகரித்துள்ளது. இதன் காரணமாக 1980களில் கடலோரப் பகுதிகளில் கடலட்டைப் பண்ணைகள் அதிகரித்தன.

இலங்கை கடலட்டைகள் அவை மிகவும் அதிக விலைக்கு விற்கப்படுகின்ற நாடுகளான சிங்கப்பூர், சீனா, ஹொங்கொங் மற்றும் தாய்வான் போன்ற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன. அங்கு அவை கிலோ ஒன்று நூற்றுக்கணக்கான டொலர்கள் என்ற வீதத்தில் விற்கப்படுகின்றன. இதன் மூலம் இலங்கைக்கு மிகவும் தேவையான அந்நிய செலாவணி ஈட்டப்படுகின்றது. 2020ஆம் ஆண்டில், இலங்கை 1.5 பில்லியன் ரூபா கடல் மதிப்புடைய சுமார் 326 தொன் கடலட்டையினை ஏற்றுமதி செய்துள்ளதுடன், வடக்கு-கிழக்கு மற்றும் வடமேற்கு கரையோரப் பகுதியில் உள்ள மீனவர்களின் முக்கிய வருமானம் ஈட்டும் வழிவகையாக மாறியுள்ளது.

ஏற்றுமதி சந்தையில் கடலட்டைக்கான கேள்வி/ தேவை அதிகரித்து வருவதால், உள்ளூர் மீனவ சமூகத்தினரிடையே கடலட்டை விவசாயத்தை ஊக்குவித்து அவர்களின் வாழ்வாதாரத்தை ஆதரிக்கவும், நாட்டிற்கு மிகவும் தேவையான அந்நிய செலாவணியை ஈட்டிக்கொள்ளவும் இலங்கை அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

கடலட்டை தொழில்துறையினை பாரிய அளவில் மேம்படுத்துவதற்கு சாதகமான சுற்றுச்சூழல் நிலைமைகளை இலங்கை கொண்டுள்ளது. இருப்பினும், கடலில் வாழுகின்ற கடலட்டையினை பிடிப்பதன் மூலமான நிலைபேண்தன்மையான உற்பத்தி, வளர்ப்பிற்காக கடலில் வாழுகின்ற இளம் கடலட்டைகளின் ஒழுங்குமுறையான விநியோகத்திற்கான அணுகல் மற்றும் கருத்திற்கொள்ளப்பட்ட மீன்வளர்ப்பு பயில்வாளர்கள் மத்தியிலான மட்டுப்படுத்தப்பட்ட நிபுணத்துவ திறன்கள் மற்றும் அறிவு தொடர்பிலான மட்டுப்பாடுகள் இலங்கையில் கடலட்டை தொழில்துறையின் நீண்டகால நிலைபேண் தன்மையான வளர்ச்சிக்குத் தடையாக இருந்துள்ளன.

பல வட மாகாண மீனவர்கள் பெரிய மீன்களைப் பிடிப்பதனை கடினமாக உணர்கின்ற நேரத்தில், பல இந்திய இழுவைப் படகுகள் உரிமம் இல்லாமல் இலங்கைக் கடற்பரப்பிற்குள் நுழைவதாகவும், அத்துமீறி மீன்பிடித்தல் மற்றும் இயந்திர மயப்படுத்தப்பட்ட இழுவை வலை மீன்பிடித்தல் போன்ற சட்டவிரோத மீன்பிடி முறைகளைப் பயன்படுத்துவதாகவும் குற்றம் சாட்டப்படுகின்றது. இது இலங்கை மீனவர்களின் வாழ்வாதாரத்தையும், தேசிய மீன் உற்பத்தியையும், மீன்பிடி ஏற்றுமதி வருமானத்தையும், இலங்கை கடற்பரப்பின் வளமான உயிர்ச்சூழல் அமைப்பையும் இல்லாதொழிப்பதோடு, தேசிய பாதுகாப்புக்கும் அச்சுறுத்தலாக உள்ளது. இந்திய மீனவர்கள் இயந்திர மயப்படுத்தப்பட்ட இழுவை வலை மீன்பிடித்தல் முறைகளைப் பயன்படுத்துவது கடலோரப் பகுதிகளைச் சேர்ந்த மீனவ சமூகங்களின் மீன்பிடி சாதனங்களுக்கும் கடுமையான அச்சுறுத்தலாக உள்ளது.

இலங்கை கடற்பரப்பிலுள்ள கடலட்டைகள் கூட இந்திய இழுவை வலை மீன்பிடி இழுவை படகுகளால் சட்டவிரோதமாக பிடிக்கப்படுகின்றன. மன்னார் மாவட்ட மீனவர் சம்மேளனத்தின் செயலாளர் என்.எம்.ஆலம் உள்ளூர் நாளிதழ் ஒன்றுக்கு அளித்த பேட்டியில், "இந்தியர்களால் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டு வருகின்ற இழுவை வலை மீன்பிடிக்கு மேலதிகமாக, தன்னிச்சையாக நமது கடற்பகுதியில் கடலட்டை பிடிப்பதிலும் ஈடுபட்டு வருவதுடன், அவ்வாறு பிடித்தவற்றை அதிகரித்த விலைக்கு எமக்கே விற்கின்றனர்" எனத் தெரிவித்தார்.



2001 ஆம் ஆண்டில், இந்தியா அனைத்து வகையான கடலட்டைகளையும் 1972 ஆம் ஆண்டின் இந்திய வனவிலங்கு (பாதுகாப்பு) சட்டத்தின் கீழ் பாதுகாக்கப்பட்ட இனமாக அறிவித்து, கடலட்டைகளை அறுவடை செய்வதை முழுமையாகத் தடைசெய்தது. அதேசமயம், இலங்கையில் இது சட்டபூர்வமானதாகவும், அறுவடையானது உரிம முறையின் கீழ் மேற்கொள்ளப்படக்கூடியதாகவும் உள்ளது.

இந்த தேவைகளை நிவர்த்தி செய்யும் நோக்கத்துடன், சட்டவிரோத இந்திய மீன்பிடியினால் கடுமையான பாதிப்பிற்குள்ளாகியுள்ள உள்ளூர் சமூகத்தின் வாழ்வாதாரத்தை நிலைநிறுத்தக்கூடிய ஒரு செழிப்பானதும் நிலைபேறானதுமான தொழில்துறைக்கு ஆதரவளிப்பதற்கு தேவையான இளம் கடலட்டை வைப்புக்களை (stock) வழங்குவதற்காக, இலங்கை அரசாங்கத்தின் ஆதரவுடன், சீன கூட்டுமுயற்சி நிறுவனமான குய் லான் (தனியார்) லிமிடெட், 2016 ஆம் ஆண்டு சித்திரை மாதம் யாழ்ப்பாணத்தின் கரையோர கிராமமான அரியாலையில் செயற்கை முறையில் இனப்பெருக்கம் செய்யும் உற்பத்தி நிலையத்தை (பொரிப்பகம்/ அடைகாப்பகம்) நிறுவியது. குய் லான் (தனியார்) லிமிடெட்டினுடைய செயற்பாடு, உள்ளூர் மக்களின் கேள்வியினை/ தேவைகளை நிறைவு செய்வதற்கான குஞ்சு பொரிப்பகம் மற்றும் வளர்ப்பகத்தினை உள்ளடக்கியது. கடலட்டை பிடிப்பதில் அது ஈடுபடவில்லை.

குய் லான் (தனியார்) லிமிடெட், தங்களின் சொந்த சூழல்நல, செயற்கை முறையிலான முட்டையிடும் நுட்பத்தைப் பயன்படுத்தி இலங்கையில் பெருமளவில் இளம் கடலட்டைகளை உற்பத்தி செய்வதில் முன்னோடியாக இருந்தது. உற்பத்தியைத் தொடங்கியதிலிருந்து, குய் லான் (தனியார்) லிமிடெட், இளம் கடலட்டைகளை நான்கு மாதங்கள் வரை வளர்த்து உள்ளூர் மக்களால் நடத்தப்படும் வணிக ரீதியிலான பண்ணைகளுக்கு வருடம் முழுவதும் விற்கின்றது.

முன்பு ஆண்டொன்றில் ஆறு மாதங்களுக்கு மட்டுமே விவசாயிகளிடம் கடலட்டைகள் காணப்பட்டன. இப்போது இவை ஆண்டு முழுவதும் காணப்படுகின்றன. இது வட பகுதியினை சேர்ந்த விவசாயிகள் இயற்கையான கடலட்டை குடித்தொகைக்கு தீங்கு விளைவிக்காத வகையில் தங்களுடைய வியாபாரத்தினை வளர்க்க உதவியது. சீன நிறுவனம் ஒன்று வட மாகாணத்தில் கடலட்டை பண்ணையைத் தொடங்கியதைத் தொடர்ந்து, 600க்கும் மேற்பட்ட மீனவர்கள் கடலட்டை பிடிப்பிற்கு மாறியுள்ளனர்.

பாரியளவிலான அறுவடைகளைப் பெறவும், அதிக விலையில் ஏற்றுமதி செய்வதன் மூலம் அதிக வருமானத்தை ஈட்டவும் உதவிய அதனுடைய தொழில்நுட்ப நிபுணத்துவத்துவத்தின் ஊடாக இந்நிறுவனத்தின் மூலமாக உள்ளூர் சமூகம் சந்தேகத்திற்கு இடமின்றி பெருமளவில் பயனடைந்துள்ளது. சீனாவிற்கும் ஏனைய தென்கிழக்கு ஆசிய நாடுகளுக்கும் கடலட்டைகளை ஏற்றுமதி செய்ததன் மூலம் இலங்கை அரசாங்கமும் 'கணிசமான அளவு' அந்நியச் செலாவணியையும் ஈட்டியது.

கடலிலுள்ள கடலட்டைகள் அளவுக்கு அதிகமாக சுரண்டப்படுவதால், பண்ணை வளர்ப்பே ஒரு தொழிலை ஆதரிப்பதற்கான எளிதானதும், மிகவும் இலாபகரமானதும், மிக முக்கியமாக நிலைபேண்தன்மையினதுமான வழிமுறை என தேசிய நீர் உயிரின வளர்ப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் (NAQDA) ஆராய்ச்சி கூறுகின்றது. குஞ்சு பொரிப்பகத்தை அடிப்படையாகக் கொண்ட செயற்கை இனப்பெருக்க முறையே கடலட்டைகளை வளர்ப்பதற்கான அதியுச்ச சுற்றுச்சூழல் - நிலைபேண்தன்மையினதான நுட்பமாகும். இலங்கை கடற்பரப்பில் கடலில் வாழ்கின்ற கடலட்டை குடித்தொகையின் அளவு குறைவதை தவிர்க்கும் முகமாக நேரடியாக கடலில் இருந்து கடலட்டை பிடிப்பின் அளவுக்கதிகமான சுரண்டலைத் தடை செய்கின்ற நடவடிக்கைகளை மீன்பிடி அமைச்சு முன்னர் எடுத்துள்ளது.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மன்னார் மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களில் 5,000 ஏக்கர் நிலத்தை பாரிய அளவிலான வணிக நோக்கத்துக்கான கடலட்டை பொரிப்பகங்களை அமைப்பதற்கு ஒதுக்குவதற்கான முன்மொழிவுக்கு இலங்கை அரசாங்கம் இவ்வாண்டு ஒப்புதல் அளித்தது. மேலும், ஏற்றுமதி கிராமங்கள் அமைப்பதற்கு 100 ஏக்கர் நிலத்தினை வழங்கவும் அரசாங்கம் ஒப்புதல் அளித்தது.

2022 புரட்டாதி 28ஆம் திகதி உள்ளூர் பத்திரிகை ஒன்றுக்குக் கருத்துத் தெரிவித்த கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, சீனக் கைத்தொழில் நிறுவனங்களால் உருவாக்கப்பட்டுள்ள கடலட்டைப் பண்ணைகள் வடமாகாண மீனவர்களுக்கு எந்தப் பாதிப்பையும் ஏற்படுத்தாது என்றும், இவற்றில் சில கைத்தொழில் நிறுவனங்கள் வடக்கில் கடந்த 4 தொடக்கம் 5 ஆண்டுகளாக இயங்கி வருவதாகவும் தெரிவித்தார். மேலும், இந்த முதலீடுகள் நாட்டுக்கு மிகவும் அவசியமானவை என அவர் மேலும் தெரிவித்தார்.


"கடலட்டைகளை வடக்கில் விளைவிப்பதற்கு முதலீடு மற்றும் தொழில்நுட்பம் ஆகிய இரண்டும் தேவை" என இந்தியப் பத்திரிகை ஒன்றுக்கு அமைச்சர் கூறினார். "நான் கடந்த ஐந்து முதல் ஆறு ஆண்டுகளாக இந்தியாவிடம் கேட்டுக்கொண்டிருக்கிறேன், ஆனால், இதுவரை எந்த பதிலும் இல்லை. நாம் மற்ற வழிமுறைகளை ஆராய வேண்டும். இல்லையா? நாங்கள் ஒரு சீன நிறுவனத்துடன் மட்டுமே பேசுகிறோம். எந்த வேலைத்திட்டமும் இதுவரை இறுதி செய்யப்படவில்லை. இந்தியாவின் பாதுகாப்பு கவலைகளுக்கு எந்த அச்சுறுத்தலையும் ஒருபோதும் அனுமதிக்க மாட்டேன்" என்று கூறினார்.

அவ்வாறிருப்பின், வட இலங்கையில் உள்ள கடலட்டை பண்ணையில் சீன நிறுவனம் முதலீடு செய்வது எவ்வாறு இந்தியாவுக்கு அச்சுறுத்தலாக மாறும்? இந்திய இழுவைப் படகுகள் உரிமம் இல்லாமல் இலங்கை கடற்பரப்பில் நுழைந்து சட்டவிரோத மீன்பிடி முறைகளை பயன்படுத்தி வட மாகாண மீனவ மக்களின் வாழ்வாதாரத்தை நசுக்குவதை ஏன் இந்தியாவால் தடுக்க முடியவில்லை? இந்தியா ஏன் கடலட்டை தொழிலில் முதலீடு செய்து, சீன நிறுவனங்களைப் போன்றே தொழில்நுட்ப நிபுணத்துவத்தை அளித்து அவர்களின் வாழ்வாதாரத்தை ஆதரித்து, நாட்டிற்குத் தேவையான அந்நிய செலாவணியைக் கொண்டுவர முடியாது?

முன்னதாக, இலங்கையின் வட பகுதியிலுள்ள மூன்று தீவுகளில் சீன உயர்-தொழில்நுட்ப புதுப்பிக்கத்தக்க எரிசக்தி நிறுவனத்தால் கட்டப்படவிருந்த கலப்பின வலுவமைப்பினை (Hybrid Energy System), பாதுகாப்பு கரிசனங்களை காரணமாக காட்டி சீன நிறுவனத்தினால் வழங்கப்பட்ட விலைமனுக்கோரல் விண்ணப்பத்திற்கு வழங்கப்படவிருந்த அனுமதிக்கு எதிராக இந்தியா கடும் எதிர்ப்பு தெரிவித்ததையடுத்து இலங்கையினால் இடைநிறுத்தப்பட்டது. இலங்கையிலுள்ள வங்கிகளில் கடனுறுதிக் கடிதங்களைப் பெற்றுக்கொள்வதன் மூலமும், இலங்கைக்கு எந்த விதத்திலும் பயனளிக்காத வகையில் இலங்கையிலுள்ள (அமெரிக்க) டொலர்களை பாவிப்பதன் மூலமும் அனல் மின்சக்தி பிறப்பாக்கிகளை இயக்குவதற்காக லங்கா இந்திய எரிபொருள் கூட்டுத்தாபனத்திடமிருந்து (Lanka IOC) இலங்கை எரிபொருளினை வாங்கவேண்டியுள்ளதனைப் பார்ப்பது சங்கடமளிப்பதாக உள்ளது.

திருகோணமலையில் இலங்கையினுடைய இரண்டாவது எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தினை திருகோணமலையில் அமைப்பதற்கு இலங்கை அரசாங்கம் LIOC இற்கு புரட்டாதியில் அழைப்பு விடுத்தது. ஆனால் இதுவரை LIOC இனால் சாதகமான பதில் எதுவும் வழங்கப்படவில்லை. ஆனால், எதிர்காலத்தில் இலங்கைக்கு உத்திரவாதமான எரிசக்தி பாதுகாப்பையும் விநியோக ஸ்திரத்தன்மையையும் வழங்கக்கூடியதும், இலங்கையை வங்காள விரிகுடாவில் பெற்றோலிய மையமாக மாற்றக்கூடியதுமான எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தை முதலீடு செய்து அமைக்க சீனா ஒப்புக்கொள்ளும்போது இந்தியா மற்றொரு பாதுகாப்பு கரிசனையினை முன்வைக்கும்.

அம்பாந்தோட்டை சர்வதேச துறைமுகத்தில் சீன ஆராய்ச்சி மற்றும் ஆய்வுக் கப்பலான 'யுவான் வாங் 5' (Yuan Wang 5) நிறுத்தப்படுவது குறித்தும் இந்தியா கரிசனை தெரிவித்திருந்தது, இருப்பினும், இந்தியாவின் கரிசனையையும் மீறி 'யுவான் வாங் 5' (Yuan Wang 5) வருவதற்கு இலங்கை அனுமதித்தது.


- மாயா மயூரன் -

**(மாயா மயூரன் தற்போது BRI ஆலோசனை மற்றும் ஆதரவு தொடர்பில் வலுவான நிபுணத்துவம் கொண்ட, இலங்கையர்-தலைமையிலான, ஒரு சுயாதீனமானதும் முன்னோடியான அமைப்பான BRISL இன் பணிப்பாளராக பணியாற்றுகிறார். மாயாவை mayalk2000@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரியினூடாக தொடர்பு கொள்ளலாம்.)**

## நக்கல் நமசிவாயம்

***இந்த தீபாவளிக்குள்ளயும் தமிழருக்கு அரசியல் தீர்வு வரேல்ல..!***



## இன்றைய நாளில்...

- ★ 1924 – இந்தியாவில் சுபாஷ் சந்திரபோஸ் பிரித்தானியரால் சிறைப்பிடிக்கப்பட்டார்.
- ★ 1995 – கொழும்பு கொலன்னாவை எண்ணெய்க் குதங்களில் இடம்பெற்ற பெரும் தீயில் 21 படையினர் கொல்லப்பட்டனர்.
- ★ 2000 – பிந்துனுவேவ படுகொலைகள்: இலங்கையில் பண்டாரவளை, பிந்துனுவேவ சிறைச்சாலை மீது நடத்தப்பட்ட தாக்குதலில் தமிழ் அரசியல் கைதிகள் 26 பேர் கொல்லப்பட்டனர்.

# மறக்கமுடியாத பிந்துனுவெவ தாக்குதல்!

2000ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 25 ஆம் திகதி பண்டாரவளை, பிந்துனுவெவ சிறைகள் மீது சிங்களவர்கள் நடத்திய தாக்குதலில் தமிழ் அரசியல் கைதிகள் 26 பேர் கொல்லப்பட்டனர்.

அப்போது பிந்துனுவெவவில் இலங்கை அரசாங்கத்தினால் நிர்வகிக்கப்பட்ட தடுப்பு முகாமை ஆக்கிரமித்து முகாமில் நிராயுதபாணிகளாக இருந்த தமிழ் இளைஞர்களைத் தாக்கினர். இதில் 29 பேர் கொல்லப்பட்டனர். 27 பேர் துப்பாக்கிச் சூட்டுக்கு அல்லது வெட்டுக் காயத்துக்கு இலக்காகி ஸ்தலத்திலேயே மரணமாகினர். இருவர் படுகாயங்களுக்கு இலக்காகி பின்னர் உயிரிழந்தனர். மேலும் 12 பேர் படுகாயமடைந்தனர்.

இந்தக் கைதிகளில் பெரும்பாலானவர்கள் "தமிழீழ விடுதலைப் புலி சந்தேகநபர்கள்" ஆவர். இவர்கள் நாட்டின் அடக்குமுறை பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் வழக்கு விசாரணையின்றி நீண்ட காலத்துக்கு தடுத்து வைக்கப்பட்டவர்கள்.

பிந்துனுவெவ கொழும்பிலிருந்து 210 கி.மீ. அப்பால் பண்டாரவளைக்கு சமீபமாக உள்ளது. இந்த முகாம் முன்னர் கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கும் பின்னர் ஊர்க்காவல் படைக்கும் ஒரு பயிற்சி நிலையமாக விளங்கியது. 1980களின் கடைசிப்பகுதியில் ஐ.தே.க. அரசாங்கம் சிங்கள இளைஞர்களுக்கு எதிராக கட்டவிழ்த்துவிட்ட பயங்கரத்தின்போது இது ஜே.வி.பி. சந்தேகநபர்களை தடுத்து வைக்கப் பயன்படுத்தப்பட்டது.

இந்த முகாம் தமிழ் இளைஞர்களை நீண்ட காலத்துக்கு தடுத்து வைக்கப் பயன்படும் இலங்கையில் உள்ள ஒரு தொகை தடுப்பு நிலையங்களிலும் சிறைச்சாலைகளிலும் ஒன்றாக இருந்தது. பிந்துனுவெவ முகாம் விடுதலைப் புலிகள் சந்தேக நபர்கள் அல்லது இராணுவத்திடம் சரணடைந்த விடுதலைப் புலிகள் அங்கத்தவர்களுக்கு புனர்வாழ்வளிக்கும் நிலையமாக இருந்தது. ஆனால், இந்தச் சந்தேக நபர்கள் பலருக்கு தமிழீழ விடுதலைப் புலிகளுடன் எந்தவிதமான தொடர்பும் கிடையாது.

இந்த முகாம் அரசாங்க தேசிய இளைஞர் சேவை மன்றத்தால் பராமரிக்கப்பட்டு வந்தது. இது ஒரு ஜனாதிபதி அதிரடிப்படைப் பிரிவால் கண்காணிக்கப்பட்டு, மனித உரிமைகள் ஆணைக்குழுவினால் ஒருங்கிணைக்கப்பட்டது. இம்முகாமுக்கான பொறுப்பதிகாரியாக கெப்டன் வை.பீ.அபேரத்னவும் உதவியாளராக லெப்டினன்ட் ஏ.அபேரத்னவும் விளங்கினர். இவர்கள் இருவரும் இராணுவத் தொண்டர் படையைச் சேர்ந்தவர்கள். இங்கு பணியாற்றும் ஊழியர்களின் எண்ணிக்கை மிகவும் சிறியது. ஒரு ரிசர்வ் பொலிஸ் கான்ஸ்டபிளும் இரண்டு ஊர்க்காவல் படையினரும் இரண்டு பாதுகாப்பு உதவியாளர்களும் இரண்டு சிவிலியன் ஊழியர்களும் சேவையில் ஈடுபட்டனர். பாதுகாப்பு நடவடிக்கைகள் பெரிதும் கீழ் மட்டத்திலேயே இருந்து வந்தன. ஆனால், பாதுகாப்பு அதிகாரிகள் ரீ 56 தன்னியக்க துப்பாக்கிகளையும், பிற துப்பாக்கிகளையும் கொண்டிருந்தனர்.

இம்முகாமில் இருந்த கைதிகளில் பலரும் 17 வருட காலமாக தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிராக யுத்தம் நடைபெற்ற நாட்டின் வடக்கு, கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்தவர்கள். இருவர் தேயிலை பயிர்ச்செய்கை மாவட்டமான நுவரெலியாவில் உள்ள மஸ்கெலியா, கொட்டகலை ஆகிய நகரங்களைச் சேர்ந்தவர்கள். 11 வயதான இளம் கைதிகள் கூட இம்முகாமில் 15 மாதங்கள் தடுத்து வைக்கப்பட்டிருந்தனர்.

இத்தாக்குதல் இடம்பெறுவதற்கு முன்னதாக கைதிகள் தாம் தொடர்ந்து தடுத்து வைக்கப்படுவது தொடர்பாகவும் முகாமில் உள்ள நிலைமைகள் தொடர்பாகவும் ஒரு பிரசாரத்தை ஆரம்பித்திருந்தனர். வயதில் குறைந்தோரும் மூத்தோரும் உடனடியாக விடுதலை செய்யப்பட வேண்டும். ஏனையோரின் விடுதலை துரிதப்படுத்தப்பட வேண்டும் என்பன அவர்களின் கோரிக்கைகளாக விளங்கின. கைதிகள் தமது கடிதங்கள் தபாலில் சேர்க்கப்பட வேண்டும் எனவும் தபால்களையும் தொலைபேசி அழைப்புகளையும் பெற அனுமதி வேண்டும் எனவும் கோரியிருந்தனர். சில சமயங்களில் கைதிகள் தமது கடிதங்கள் குப்பைக்கூடைகளில் கிடந்ததை கண்டிருந்தனர். அத்தோடு அவர்கள் தமக்கு சவர்க்காரம் வழங்கப்பட வேண்டும் எனவும் கோரியிருந்தனர்.

இக்கோரிக்கைகள் இதற்கு முன்னரும் பல தடவைகள் முன்வைக்கப்பட்டு வந்துள்ளன. கெப்டன் அபேரத்ன இவற்றுக்குத் தீர்வு வழங்க முடியாது எனக் கூறியதைத் தொடர்ந்து கைதிகள் தாம் உயர் அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தை நடத்த வேண்டும் என்றுள்ளனர். ஒக்டோபர் 24 மாலை 6 மணியளவில் நடந்த கூட்டத்தின்போது கைதிகள் அபேரத்னவிடம் இதை மீண்டும் கேட்டதோடு, சிலர் அவரைச் சுற்றி வளைத்தும் நின்றனர். ஒரு பொலிஸ் அதிகாரி தனது துப்பாக்கியால் ஆகாயத்தில் சுட்டார். இதன் மூலம் கைதிகளின் ஆத்திரத்தை தூண்டினார்.

பின்னர் கைதிகள் வன்முறையில் இறங்கியதாகவும் களஞ்சிய அறைக்குள் நுழைந்து தம்மை இரும்புக் கம்பிகளால் ஆயுதபாணிகளாக்கியதாகவும் கட்டடங்கள், தளபாடங்கள், பொலிஸ் அரணை சேதப்படுத்தியதாகவும் ஆவணங்களுக்குத் தீ மூட்டியதாகவும் கூறப்பட்டது . பொறுப்பதிகாரி பணயக்கைதி ஆக்கப்பட்டதாகக் கூறும் பொலிஸ் அறிக்கையை சாதகமாக்கிக் கொண்ட வெகுசனத் தொடர்பு சாதனங்கள் ஒரு கலகத்துக்கான சித்திரத்தைத் தீட்டவும், கைதிகள் முகாமை தமது பிடிக்குள் கொண்டுவந்ததாகவும் காட்டின.



கைதிகளுடன் கூட்டத்தில் ஏற்பட்ட எதிர்வுகொள்ளலின் பின்னர் முகாம் அதிகாரிகள் பண்டாரவளை பொலிஸுக்கு தொலைபேசியில் கதைத்தனர். 30 பேர் கொண்ட ஒரு பொலிஸ் குழு ரி 56 துப்பாக்கிகளுடன் மாலை 8 மணிக்கு வந்திறங்கியது. இவர்களுடன் மேலும் 39 பொலிஸாரும் சேர்ந்து கொண்டனர். இவர்கள் ஏனைய பொலிஸ் நிலையங்களிலிருந்து வந்தனர். ஒரு இராணுவக் கோஷ்டி 10 கி.மீ.க்கு அப்பால் உள்ள தியத்தலாவ இராணுவ முகாமில் இருந்து வந்தது.

தாக்குதலில் உயிர் தப்பிய ஒரு கைதி எமக்கு தெரிவித்ததன்படி, கைதிகள் ஆயுதம் தாங்கிய பொலிஸாரை முகாமுக்குள் வர வேண்டாம் எனக் கூறியுள்ளனர். ஆனால், பின்னர் தலைமையக பொலிஸ் அதிகாரியை (HQI) ஆயுதமின்றி உள்ளே வர அனுமதித்தனர். கூட்டத்தின்போது பொலிஸ் அதிகாரி ஒருவர் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததையிட்டு அவர்கள் அவரிடம் (HQI) ஆட்சேபம் தெரிவித்தனர். வெளியே கல்வியியல் கல்லூரிக்கு (Education Faculty) சமீபமாக சுமார் 200-300 பேர் கொண்ட ஒரு கூட்டம் கூடியதாகவும் கைதிகள் மீது கல் வீசியதாகவும் அவர் கூறினார். இதற்கு எதிராக இராணுவமோ அல்லது பொலிஸாரோ எதுவித நடவடிக்கையும் எடுக்கவில்லை. அவர்களை அங்கிருந்து அகன்று செல்லுமாறு மட்டுமே கேட்டனர்.

இரும்புக் கம்பிகள், கத்திகள், கோடரிகள், வாள்கள் சகிதம் நுழைந்த குண்டர்கள் தமிழ்க் கைதிகளை வெட்டிக் கொல்வதில் ஈடுபட்டனர். சில கைதிகளின் தலைகள் அடித்து நொறுக்கப்பட்டன. இக்கும்பல் கட்டடங்களுக்குத் தீ மூட்டியது. இக்கும்பல் கைதிகளை உயிருடன் நெருப்புக்குள் தள்ளியதாக உயிர் பிழைத்தவர்கள் தெரிவித்தனர். இக்குண்டர்கள் நுழைவதைத் தடுக்க கெப்டன் அபேரத்ன எதுவும் செய்யவில்லை. இவர்கள் நுழைந்ததுதான் தாமதம் அவர் அங்கிருந்து வெளியேறிவிட்டார்.

பொலிஸாரின் பாத்திரம் மிகவும் தெளிவானது. முதல் எச்சரிக்கையின் பின்னர் எதுவித மேலதிக படையணியும் அனுப்பப்படவில்லை. குண்டர்கள் முகாமுக்குள் நுழைவதைத் தடுத்து நிறுத்த எதுவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. ஒரு வழக்கறிஞர் கூறியதன்படி முகாமுக்குள் வலுக்கட்டாயமாக நுழைந்ததற்கான எந்தவிதமான அறிகுறிகளும் இல்லை. முட்கம்பி வேலி அப்படியே இருந்து கொண்டுள்ளது. கைதிகளில் சிலர் குண்டர்களிடமிருந்து தப்பி முகாமுக்கு வெளியே ஓட முயன்றபோது பொலிஸாரால் சுடப்பட்டுள்ளனர்.

பொலிஸாரும் பின்னர் இராணுவமும் எந்தவொரு குண்டரையும் கைதுசெய்ய நடவடிக்கை எடுக்கவில்லை. இராணுவ கெப்டன் சரித்த தேமத்தம்பிட்டிய இப்படுகொலைகளின் பின்னரே ஸ்தலத்துக்கு விஜயம் செய்தார். பெருமளவிலான மக்கள் கூட்டம் முகாமுக்கு வெளியே நின்று கொண்டு இருந்ததையும் காயமடைந்த சிலரை வீதியிலும் கண்டதாக அவர் நீதவான் விசாரணையின்போது தெரிவித்தார். முகாமினுள் பல வகையான ஆயுதங்களுடன் மக்கள் நின்றதாக அவர் தெரிவித்தார். பொலிஸ் தலைமையக அதிகாரியின் வேண்டுகோளின் பேரில் கெப்டன் மக்கள் கூட்டத்தை கலைந்து செல்லுமாறு கேட்டதாகவும் அவர்கள் அங்ஙனம் செய்ததாகவும் கூறப்பட்டது.

இந்தக் குற்றவாளிகளில் எவரையேனும் கைதுசெய்ய அவர் முயன்றாரா என அவரிடம் கேட்கப்பட்டது. சிவிலியன்களை கைது செய்யும் அதிகாரம் தமக்கு கிடையாது என தேமத்தம்பிட்டிய பின்னர் தெரிவித்தார். அத்தோடு அவர் பொலிஸார் எவரையும் கைதுசெய்ய முயற்சிக்கவில்லை எனவும் குறிப்பிட்டார். இராணுவத்தினர் மக்களை கைதுசெய்வதும் பொலிஸாரிடம் ஒப்படைப்பதும் வழக்கம் என்பதை இங்கு குறிப்பிட்டாக வேண்டும். இச்சம்பவத்தின் பின்னர் பொலிஸார் 'விசாரணைக்காக' பல நூற்றுக்கணக்கான கிராமவாசிகளையும் பெண்களையும் பிள்ளைகளையும் சுற்றிவளைத்து கைதுசெய்தனர். கொலையாளிகளைப் பற்றி விசாரணை செய்வதற்குப் பதிலாக பொலிஸார் 50 பேரை சுயமாக முன்வந்து குற்ற ஒப்புதல் வாக்குமூலம் அளிக்கும்படி வேண்டினர். இதன்மூலம் படுகொலைகளை பூசி மெழுகவும் பொலிஸாரின் பாத்திரத்தை மூடி மழுப்பவும் முயன்றனர். தமிழ்க் கைதிகள் கேட்பாரின்றித் தாக்குதலுக்குள்ளாகி கொல்லப்பட்ட பல சம்பவங்களில் மறக்கமுடியாத ஒன்றாக பிந்துனுவெவ சம்பவத்தைக் குறிப்பிடலாம். இந்தச் சம்பவம் இடம்பெற்று இன்றுடன் 22 வருடங்கள் நிறைவு பெற்றுள்ளன.


திகதி 23.10.2022 ஞாயிற்றுக்கிழமை உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk NLB

மஹஜன சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் : 4917
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 7,553,940.00
ஆங்கில எழுத்து V வெற்றி இலக்கங்கள் 6 3 1 1 4 2
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 32,130,517.00

கொவிசெத Govisetha
சீட்டிழுப்பு இலக்கம் 3159
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 3,452,800.00
ஆங்கில எழுத்து L வெற்றி இலக்கங்கள் 15 34 39 56
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 84,291,142.80

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் : 1372
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 1,546,480.00
வெற்றி இலக்கினம் கும்பம் வெற்றி இலக்கங்கள் 9 5 5 9 3 6
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 10,616,549.60

தன நிதானய
சீட்டிழுப்பு இலக்கம் : 947
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 2,679,060.00
வெற்றி இலக்கினம் Z வெற்றி இலக்கங்கள் 21 46 56 81
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 130,804,282.80

ராசி சுப பலன் Handahana
சீட்டிழுப்பு இலக்கம் : 226
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 5,678,440.00
இலக்கினம் துலாம் வெற்றி இலக்கங்கள் 02 18 41 58 விசேட இலக்கினம் துலாம்
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 2,518,030.60

கோடி 27 + Mega POWER மெகா பவர்
சீட்டிழுப்பு இலக்கம் 1265
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 3,500,220.00
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 277,410,950.00
E 08 02 26 37 78
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00 அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

தேசிய லொத்தர் சபை National Lotteries Board
தொலைபேசி: 011-4607000, 011 - 4607001 - 2 பெக்ஸ்: 011 4669475
Email : info@nlb.lk Web : www.nlb.lk
இலக்கம் 32, தேஷமான்ய N.W.J. முதலிகே மாவத்த, கொழும்பு 01

# மவுசாக்கலை நீர்த்தேக்கத்தின் மூன்று வான் கதவுகள் திறப்பு



(மஸ்கெலியா செய்தியாளர்)

மஸ்கெலியா மவுசாக்கலை நீர்த்தேக்கத்தின் வான் கதவுகள் மூன்றும் நேற்று ஒரே நேரத்தில் திறந்து விடப்பட்டுள்ளன.

இதனால் தாழ் நிலப்பகுதியில் உள்ள மக்களை மிகவும் அவதானமாக இருக்குமாறு நீர்மின் நிலைய அதிகாரி மற்றும் நுவரெலியா மாவட்ட அரசாங்க அதிபர் நந்தன கலபட ஆகியோருடன் இணைந்து நுவரெலியா மாவட்ட அனர்த்த முகாமைத்துவ அதிகாரி ரஞ்சித் அலககோன் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

கடந்த சில நாட்களாக பெய்த கனமழையால் மவுசாக்கலை, கென்யோன், லக்சபான, பொல்பிட்டிய, நவலக்சபான, விமலசுரேந்திர, காசல்ரீ, மேல் கொத்மலை ஆகிய நீர்த் தேக்கங்களுக்கு நீர்வரத்து அதிகரித்துள்ளது. இதனால் நீர்த்தேக்கத்தின் வான் கதவுகள் திறந்து விடப்பட்டுள்ளன.

தொடர்ந்து இப் பகுதியில் கன மழை பெய்து வருவதால் நீரேந்துப் பகுதியில் உள்ள அனைத்து நீரோடைகள் மற்றும் காட்டாறுகளில் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டுள்ளது.

இதனால் பெருந்தோட்டத் தொழிலாளர்கள் மற்றும் பண்ணையாளர்கள் மிகவும் சிரமத்தின் மத்தியில் தங்களது பணியை மேற்கொண்டு வருகின்றனர்.



கண்டி ஸ்ரீ செல்வவிநாயகர் ஆலயத்தின் தீபாவளிப் பண்டிகை விசேட பூஜை கோயிலின் அறங்காவலர் கிருஸ்ணமூர்த்தி தலைமையில் இடம்பெற்றது. நவகலச திரவிய அபிஷேகமும் அலங்கார தீபாராதனைகளுடன் வேதமந்திரம் ஒலிக்க, மங்கள வாத்தியம் முழங்க, விசேட வசந்த மண்டப பூஜையும் உள்வீதி உற்சவமும் நடைபெற்றது. (இக்பால் அலி)



தீபாவளி தினத்தை முன்னிட்டு கம்பளை முத்துமாரியம்மன் ஆலயத்தில் விசேட பூஜைகள் இடம்பெற்றன. (படப்பிடிப்பு: கம்பளை செய்தியாளர்)

# போதைப்பொருளுடன் கண்டியில் ஐந்து சந்தேக நபர்கள் கைது

(கண்டி நிருபர்)

கட்டுகஸ்தோட்டை பொலிஸ் பிரிவில் மேற்கொள்ளப்பட்ட விசேட தேடுதல் நடவடிக்கை ஒன்றின்போது ஏழாயிரத்து 700 மில்லிகிராம் ஹெரோயின் போதைப் பொருளும், இரண்டாயிரத்து 400மில்லி கிராம் கஞ்சா போதைப்பொருளும் கைப்பற்றப்பட்டதுடன் 5 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டனர்.

கண்டி நீதவான் முன்னிலையில் சந்தேக நபர்களை ஆஜர் செய்தபோது எதிர்வரும் முதலாம் திகதிவரை தடுப்புக் காவலில் வைக்கும்படி நீதவான் உத்தரவிட்டார்.

பொலிஸார் மேற்கொண்ட மேற்படி விசேட நடவடிக்கை ஒன்றின்போது தேக்கவத்தை என்ற இடத்தில் மூன்று சந்தேக நபர்களை கைது செய்தனர். அவர்கள் வசம் ஒருவரிடம் ஐயாயிரம் மில்லிகிராம் ஹெரோயின் போதைப்பொருளும் மற்றும் ஒருவரிடம் இரண்டாயிரத்து 700 மில்லி கிராம் ஹெரோயின் போதைப்பொருளும் காணப்பட்டுள்ளது.

மெகொடகம மற்றும் கட்டுகஸ்தோட்டை ஆகிய இடங்களில் மேலும் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அவர்கள் வசம் இரண்டாயிரத்து 400 மில்லி கிராம் கஞ்சா போதைப் பொருள் கைப்பற்றப்பட்டுள்ளது. இவர்கள் போதைக்கு அடிமையானவர்கள் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேக நபர்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

# விக்டோரியா அணைக்கட்டை படம் பிடித்த ஏழு பேர் கைது

(கண்டி நிருபர்)

விக்டோரியா அணைக்கட்டை படம் பிடித்தார்கள் என சந்தேகிக்கப்படும் 7 பேர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். கண்டி, தெல்தெனிய விக்டோரியா அணை மற்றும் அதனை அண்மித்த பகுதிகள் அதிஉயர் பாதுகாப்பு வலயமாக்கப்பட்டுள்ளது. எனவே அதிகாரம் அளிக்கப்பட்ட அதிகாரியின் அனுமதியின்றி அங்கு புகைப்படம் எடுப்பது குற்றமாகும்.

இருப்பினும் 7 பேர் அவ்வாறு அனுமதி இன்றி புகைப்படம் எடுத்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்டு கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்கள் தெஹிவளை, வெலிகம போன்ற இடங்களைச் சேர்ந்தவர்களாவர். அணைக்கட்டை அண்மித்து பாதுகாப்புக் கடமையில் இருந்த அதிகாரிகளால் இவர்கள் கைது செய்யப்பட்டதாக தெல்தெனிய பொலிஸார் தெரிவித்தனர்.

# தமிழர்களுக்கு கௌரவமான அரசியல் தீர்வை வலியுறுத்தி வல்லிபுரத்தில் போராட்டம்



(மன்னார் நகர் நிருபர்)

வடக்கு- கிழக்கு மக்களுக்கு கௌரவமான அரசியல் தீர்வை கோரும் பயணத்தில் 84ஆவது நாள் கவனயீர்ப்பு நிகழ்வு நேற்றுமுன்தினம் காலை 10 மணியளவில் முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு செயலகத்தின் வல்லிபுரம் கிராமத்தில் அடை மழைக்கு மத்தியில் நடைபெற்றது.

குறித்த 100 நாள் செயல்முனைவின் 84ஆம் நாள் போராட்டத்தில் புதுக்குடியிருப்பு பகுதியில் உள்ள பொதுமக்கள், சிவில் அமைப்புகளின் பிரதிநிதிகள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

இதன்போது "பெண்களுக்கு எதிரான வன்முறைகளை இல்லாதொழிப்போம், எங்கள் நிலம் எமக்கு வேண்டும், நடமாடுவது எங்கள் உரிமை, பேச்சு சுதந்திரம் எங்கள் உரிமை, ஒன்று கூடுவது எங்கள் உரிமை, மத வழிபாடு எங்கள் சுதந்திரம், எமது மத தளங்களின் புனிதத்தை கொச்சைப் படுத்தாதே, இந்து மத ஆலயங்களின் இடங்களை திட்டமிட்டு சுபீகரிக்காதே" என பல கோரிக்கைகளை முன்வைத்தனர்.

# போதைக்கு அடிமையான இளைஞர் யாழில் கைது

யாழ்ப்பாணம் கோப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஆனந்தபுரம் பகுதியில் 100 மில்லிகிராம் ஹெரோயின் போதைப் பொருளுடன் 25 வயதுடைய இளைஞன் கைது செய்யப்பட்டுள்ளார்.

கோப்பாய் பொலிஸாருக்கு கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில், குறித்த இளைஞனை கைது செய்த பொலிஸார் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

விசாரணைகளின்போது, தான் கடந்த ஐந்து வருடகாலமாக போதைப்பொருளுக்கு அடிமையாகி உள்ளதாகவும் அதிலிருந்து மீண்டு வர தன்னால் முடியாதுள்ளதால் தொடர்ந்து போதைப்பொருளை நுகர்ந்து வருவதாகவும் ஆனந்தபுரம் பகுதியிலேயே போதைப்பொருளை தன்னால் பெற்றுக்கொள்ளக்கூடியதாக உள்ளதாகவும் குறித்த இளைஞர் தெரிவித்துள்ளார்.





வரலாற்று புகழ்மிக்க நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தில் தீபாவளியை முன்னிட்டு நேற்று விசேட பூஜைகளில் கலந்துகொள்ள பெருந்திரளான அடியார்கள் வருகைதந்திருந்தனர். (படப்பிடிப்பு: யாழ். செய்தியாளர்)



கண்டி, குண்டசாலையைச் சேர்ந்த திருமதி சில்மியா சகாப்தீன் இன நல்லுறவுக்கான சகவாழ்வு மையத்தின் கண்டி மாவட்ட சமாதான தூதுவராக அண்மையில் நியமிக்கப்பட்டார். அவரை கௌரவிக்கும் வகையில் கண்டி டெவொன் ஹோட்டலில் நடைபெற்ற வைபவமொன்றில் கண்டி மாவட்ட சர்வமத அமைப்பின் தலைவரும் முன்னாள் கண்டி மாவட்ட செயலாளருமான ஜி. பொல்கொல்ல நினைவுச் சின்னம் வழங்கினார். (கண்டி செய்தியாளர்)

# வீட்டிலுள்ள பொருட்களை விற்று போதை பாவனை அச்சுவேலியில் இளைஞர் கைது



(யாழ். செய்தியாளர்)

யாழ்ப்பாணம், அச்சுவேலி பகுதியில் 40 மில்லி கிராம் ஹெரோயின், மருந்து ஏற்றும் ஊசி, தேசிக்காய் என்பவற்றுடன் இளைஞன் ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். அச்சுவேலி பத்தமேனி பகுதியை சேர்ந்த 30 வயதுடைய குறித்த இளைஞன் போதைக்கு அடிமையான நிலையில், வீட்டில் இருக்கும் பொருட்களை திருடி விற்று, போதைப்பொருட்களை வாங்குவதாக விசாரணைகளில் தெரிவித்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

தமக்கு கிடைக்கப்பெற்ற இரகசியத்தகவலின் அடிப்படையிலேயே குறித்த இளைஞனை கைது செய்ததாகவும், மேலதிக விசாரணைகளின் பின்னர் மல்லாகம் நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் அச்சுவேலி பொலிஸார் தெரிவித்தனர்.

# அச்சுவேலியில் தொடரும் வழிப்பறிக் கொள்ளைகள்

**முதியவரிடம் 15ஆயிரம் ரூபா பணம் திருட்டு**

யாழ்ப்பாணம் அச்சுவேலி பகுதியில் முகமூடி வழிப்பறிக் கொள்ளையர்களினால், வீதியில் சென்ற முதியவரிடமிருந்து வாள், கத்தி ஆகியவற்றைக் காட்டி மிரட்டி 15 ஆயிரம்ரூபாகொள்ளையடிக்கப்பட்டுள்ளது.


அச்சுவேலி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஆவரங்கால் வன்னியசிங்கம் வீதியில் கடந்த சனிக்கிழமை இரவு இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

வீதியில் முதியவர் பயணித்துக்கொண்டிருந்தவேளைமோட்டார் சைக்கிளில் பின் தொடர்ந்து வந்த முகமூடி அணிந்த நபர்கள், முதியவருக்கு கத்தி மற்றும் வாள் என்பவற்றை காட்டி அச்சுறுத்தி அவரிடமிருந்து 15 ஆயிரம் ரூபா பணம் மற்றும் அவரது ஆவணங்கள் அடங்கிய பை என்பவற்றை கொள்ளையடித்து தப்பிச் சென்றுள்ளனர்.

அச்சுவேலி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வல்லைவெளி பிரதேசம் உள்ளிட்ட பகுதிகளில் கடந்த இரு வார காலப் பகுதிக்குள் 10க்கும் மேற்பட்ட வழிப்பறிச் சம்பவங்கள் பதிவாகியுள்ள நிலையில் இதுவரையில் குறித்த கொள்ளைக் கும்பல் கைது செய்யப்படவில்லை.

கொள்ளைச் சம்பவங்களை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படாமையால் தாம் அச்சத்துடனேயே வீதிகளில் பயணிக்கிறோம். எனவே உரிய தரப்புகள் வழிப்பறி மற்றும் கொள்ளைச் சம்பவங்களை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என அப்பகுதி மக்கள் தெரிவித்தனர்.

# யாழில் கடும் மழையால் சோபையிழந்த தீபாவளி



யாழ்ப்பாணத்தின் பல பாகங்களிலும் கடும் மழை பொழிந்தமையால், தீபாவளி கொண்டாட்டங்கள் சோபையிழந்து காணப்பட்டன. பொருளாதார நெருக்கடிகள் காரணமாக இம்முறை மக்கள் புத்தாடைகள் வாங்குதல், வெடிகள் வாங்குதல் என்பவற்றில் நாட்டம் இல்லாத நிலைமை காணப்பட்டது. இந்நிலையில் நேற்றைய தினம் முற்பகல் முதல் கடும் மழை பொழிந்ததால் தீபாவளி கொண்டாட்டங்கள் சோபையிழந்தன.

பெரும்பாலானவர்கள் ஆலய வழிபாடுகளுடன் தமது கொண்டாட்டங்களை மட்டுப்படுத்திக்கொண்டனர்.

# காணி சீர்திருத்த ஆணைக்குழு சட்டத்தைப் புதுப்பித்து செயற்பாட்டை மறுசீரமைக்க கோப் குழு பணிப்புரை

## செயலாற்றுகை ஆய்வுக்கு ஆறு வாரங்கள்

## மூன்று மாதங்களில் மீண்டும் கோப் குழு முன்னிலையில் அழைப்பு









காணி சீர்திருத்த ஆணைக்குழுவின் சட்டத்தைப் புதுப்பித்து அதன் செயற்பாடுகளை மறுசீரமைப்பதற்கு தேவையான செயற்பாடுகளை மேற்கொள்ளுமாறு அரசாங்கப் பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழு (கோப் குழு) காணி அமைச்சின் செயலாளர் சூலானந்த பெரேராவிற்குப் பணிப்புரை விடுத்தது.

இதற்கமைய ஆறு வாரங்களுக்குள் இது தொடர்பில் எடுக்கக் கூடிய நடவடிக்கைகள் குறித்து கோப் குழுவுக்கு அறிக்கையொன்றைச் சமர்ப்பிக்குமாறும் உத்தரவிடப்பட்டது.

2020ஆம் ஆண்டுக்கான காணி மறுசீரமைப்பு ஆணைக்குழு குறித்த கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை மற்றும் அதன் தற்போதைய செயலாற்றுகை குறித்து ஆராயும் நோக்கில் அரசாங்கப் பொறுப்பு முயற்சிகள் குழு (கோப் குழு) அதன் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் ரஞ்சித் பண்டார தலைமையில் அண்மையில் (21) கூடியபோதே இந்தப் பணிப்புரை விடுக்கப்பட்டது.

இதில் கோப் குழுவினால் பல்வேறு பரிந்துரைகள் முன்வைக்கப்பட்டதுடன், இந்தப் பரிந்துரைகள் நிறைவேற்றப்படுவது பற்றி ஆராய்ந்து பார்ப்பதற்கு காணி சீரமைப்பு ஆணைக்குழுவை மூன்று மாதங்களின் பின்னர் மீண்டும் குழு முன்னிலையில் அழைப்பதற்கும் தீர்மானிக்கப்பட்டது.

இந்த ஆணைக்குழு காணிகளைக் கையகப்படுத்தும்போது காணப்படும் பிரச்சினைகள் கோப் குழுவினால் கவனம் செலுத்தப்பட்டதுடன், இதற்கமைய கடந்த 20 வருடங்களில் காணி கையகப்படுத்தல் தொடர்பான விரிவான தகவல்கள் அடங்கிய அறிக்கையை ஒரு மாதத்துக்குள் கோப் குழு முன்னிலையில் சமர்ப்பிக்குமாறும் குழுவின் தலைவரினால் பணிப்புரை வழங்கப்பட்டது.

அத்துடன், காணிகளை அடையாளம் காணுதல் மற்றும் பெறுமதியை மதிப்பீடு செய்தல் என்பவற்றுக்காக விசேட செயலணியொன்றை உருவாக்குமாறு கோப் குழு பரிந்துரைத்ததுடன், குறித்த செயலணியின் பொறுப்புகள் உள்ளடங்கிய விபரங்கள் அமைச்சின் செயலாளரினால் இரண்டு வாரங்களுக்குள் கோப் குழுவுக்கு அறிவிக்கப்பட வேண்டும் என்றும் பணிப்புரை வழங்கப்பட்டது. இந்த செயலணிக்கு நில அளவையாளர் நாயகம் அல்லது அவரின் பிரதிநிதி, அரசாங்கத்தின் மதிப்பீட்டாளர் அல்லது அவரின் பிரதிநிதி ஆகியோரை நியமிக்குமாறும் கோப் குழு பரிந்துரைத்தது.

மேலும், 2018 இல் 10இலட்சம் காணித்துண்டுகளைப் பகிர்ந்தளிக்கும் வேலைத்திட்டம் தொடர்பிலும் கோப் குழுவில் கலந்துரையாடப்பட்டதுடன், இதில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்கள் குறித்த விரிவான அறிக்கையை கோப் குழு முன்னிலையில் சமர்ப்பிக்குமாறும் அதன் தலைவர் பேராசிரியர் ரஞ்சித் பண்டார அறிவுறுத்தினார். விசேடமாக இந்த வேலைத் திட்டத்துக்காகத் தற்காலிகமாக ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட 214 பேர் தொடர்பில் நிர்வாகத் திணைக்களத்துடன் கலந்துரையாடி அனுமதியளிக்கப்பட்ட பணியாளர்களின் எண்ணிக்கையை உள்ளீர்த்துக்கொள்ள உரிய தீர்வு எடுப்பது அவசியமாயின் அதனை அமைச்சரவைக்கு ஆற்றுப்படுத்துமாறும் இங்கு சுட்டிக்காட்டப்பட்டது.

அதேநேரம், காணி பகிர்ந்தளிப்பு தொடர்பான தேசிய கொள்கைக்குள் காணி சீரமைப்பு ஆணைக்குழுவின் செயற்பாடுகளை உள்ளடக்கி தேவையான ஏற்பாடுகளை மேற்கொள்ளுமாறும் கோப் குழு பரிந்துரைத்தது.

மேலும், 50 ஆண்டுகள் பழமையான இந்தக் காணி சீர்திருத்த ஆணைக்குழுவின் சட்டத்தை தற்போதைய காலத்துக்கு ஏற்ற வகையில் புதுப்பிக்க வேண்டும் எனவும் கோப் குழு பரிந்துரைத்தது.

காணி சீர்திருத்த ஆணைக்குழுவினால் ஆரம்பிக்கப்பட்டு தற்பொழுது 350 மில்லியன் ரூபா செலவு செய்து தற்காலிகமாக இடைநிறுத்திவைக்கப்பட்டுள்ள இயற்கை உர வேலைத்திட்டம் உர உற்பத்தி தொடர்பில் அனுபவம் வாய்ந்த அரசாங்க நிறுவனமொன்றுக்கு வழங்குவதற்கு இரண்டு வார காலங்களுக்குள் நடவடிக்கை எடுக்குமாறும் கோப் குழுவினால் பரிந்துரைக்கப்பட்டது.

காணி சீர்திருத்த ஆணைக்குழுவின் காணாமல் போன கோப்புகள் தொடர்பிலும் இங்கு கலந்துரையாடப்பட்டதுடன், காணாமல் போன கோப்புகள் பற்றிய பட்டியல் உடனடியாக கணக்காய்வாளர் நாயகத்திடம் சமர்ப்பிக்கப்பட வேண்டும் என்றும் கோப் குழு அறிவித்தது.

நியதிச்சட்ட முறையின் கீழ் முன்னர் அடையாளம் காணப்பட்ட பயனாளிகள் தொடர்பில் உள்ள பிரச்சினைகளுக்கான தீர்வுகள் பற்றி உடனயடியாக நடவடிக்கை எடுக்குமாறும் குழு பணிப்புரை விடுத்தது.

அத்துடன், இந்த ஆணைக்குழுவின் நிதிநிலை அறிக்கை தொடர்பான கணக்காய்வாளர் நாயகத்தின் கருத்து சுமார் 10 வருடங்களாக மறுக்கப்பட்ட நிலையில், நிதிநிலை அறிக்கைகளை சரியாக தயாரித்து வருடாந்த அறிக்கையை 3 மாதங்களுக்குள் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்க ஏற்பாடு செய்யுமாறும் அறிவிக்கப்பட்டது.

மேலும், முழுமையாக ஒன்றிணைக்கப்பட்ட கணினிக் கட்டமைப்பை உருவாக்கி மேம்படுத்துவதற்காக தனியார் கணினி நிறுவனமொன்றுக்கு செலுத்தப்பட்ட 17 மில்லியன் ரூபா பணத்தை மீளப் பெற்றுக்கொடுக்க சம்பந்தப்பட்ட நிறுவனத்திற்கு எதிராக நடவடிக்கை எடுக்கவும், சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கவும் கோப் குழு பரிந்துரைத்துள்ளது.

ஹோமாகம பிரதேசத்தில் வரிப்பத்திரமின்றி தனியார் நிறுவனமொன்றுக்கு வழங்கப்பட்டுள்ள 6 ஏக்கர் காணிக்காக அறிவிடப்படவேண்டிய சுமார் 12 மில்லியன் ரூபாவை மீள அறவிட்டுக் கொள்வதற்கு இரண்டு வாரங்களுக்குள் சட்ட நடவடிக்கை எடுக்குமாறு கோப் குழு பணிப்புரை விடுத்துள்ளது. இதற்காக ஒப்பந்தம் செய்துகொள்ளாமை மற்றும் மதிப்பீட்டின் பெறுமதியில் 6 வீதத்துக்குப் பதிலாக 4 வீதம் அறிவிடப்பட்டமை தொடர்பில் ஆராய்ந்து கோப் குழுவுக்கு அறிக்கையொன்றை சமர்ப்பிக்குமாறும் இங்கு உத்தரவிடப்பட்டது.

அமைச்சரவைத் தீர்மானத்துக்கு எதிராக குத்தகைக்கான ஒப்பந்தமின்றி 2016 ஆம் ஆண்டு முதல் அரசாங்கத்தின் மதிப்பீட்டையும் மீறி இந்தக் ஆணைக்குழுவின் தலைமை அலுவலகம் இயங்கிவந்த கட்டடத்தைக் குத்தகைக்குப் பெற்றமை குறித்து சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் இந்த அலுவலகத்தை அரசாங்கத்தின் கட்டடமொன்றுக்குக் கொண்டு செல்வதற்கு நடவடிக்கை எடுக்குமாறும் இங்கு வலியுறுத்தப்பட்டது.

அத்துடன், இரண்டு சம்பளங்களைப் பெற்றுக்கொண்ட சட்டத்தரணியான விசாரணை அதிகாரி தொடர்பில் சம்பந்தப்பட்ட நிறுவனத்திடம் விசாரித்து 1.7 மில்லியன் ரூபா சம்பளம் மற்றும் ஏனைய கொடுப்பனவுகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்குமாறும், குறித்த அதிகாரிக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்குமாறும் அறிவுறுத்தப்பட்டது.

அத்துடன், அரசாங்க நிறுவனங்களிடமிருந்து அறவிடப்பட வேண்டியுள்ள வரி நிலுவைத் தொகையான 2 பில்லியன் ரூபா தொடர்பில் குறிப்பிட்ட நிறுவனங்கள் மற்றும் திறைசேரியுடன் கலந்துரையாடி உடனடியாகத் தீர்ப்பதற்கு ஏற்பாடுகளைச் செய்யுமாறும் பரிந்துரைக்கப்பட்டது. இக்கூட்டத்தில் இராஜாங்க அமைச்சர்களான ஜகத் புஷ்பகுமார, இந்திக அனுருத்த, டி.வி. சானக, சாந்த பண்டார, ஜனக வக்கம்புர, நாடாளுமன்ற உறுப்பினர்களான அநுரகுமார திஸாநாயக்க, மஹிந்தானந்த அளுத்கமகே, பாட்டலி சம்பிக்க ரணவக்க, இரான் விக்கிரமரத்ன, நளின் பண்டார, நிமல் லான்சா. எம்.மரிக்கார், ரோஹினி கவிரத்ன, பேராசிரியர் சரித ஹேரத், முஜிபுர் ரஹ்மான், மதுர விதானகே, உபுல் மகேந்திர ராஜபக்ஷ, பிரேம்நாத் சி.தொலவத்த, ஜகத்குமார சுமித்ராரச்சி ஆகியோர் கலந்துகொண்டனர்.

## இந்திய இராணுவத்தின் கொக்குவில் இந்து படுகொலையின் 35ஆவது ஆண்டு நினைவு

### நேற்று யாழில் அனுஷ்டிப்பு

யாழ்ப்பாணம் - கொக்குவில் இந்துக் கல்லூரியில் இந்திய இராணுவத்தால் நடத்தப்பட்ட படுகொலையின் 35ஆவது நினைவேந்தல் நிகழ்வு நேற்றைய தினம் திங்கட்கிழமை நடைபெற்றது.

காங்கேசன்துறை வீதியிலுள்ள கொக்குவில் இந்துக் கல்லூரியின் மைதான நுழைவாயிலுக்கு முன்பாக இந்த நினைவேந்தல் இடம்பெற்றது.

இப்படுகொலையில் உயிரிழந்தவர்களின் உறவினர்களாலும், அப்பகுதி மக்களாலும் ஏற்பாடு செய்யப்பட்ட இந்நினைவேந்தல் நிகழ்வில் உயிரிழந்தவர்களுக்காக சுடரேற்றி மலர்தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது.

1987 ஒக்டோபரில் இந்திய இராணுவத்திற்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையில் யுத்தம் தொடங்கிய பின்னர் இந்திய இராணுவத்தின் பரவலான விமானக்குண்டு வீச்சு மற்றும் எறிகணைத் தாக்குதலுக்கு அஞ்சி கொக்குவில், ஆனைக்கோட்டைப் பகுதியைச் சேர்ந்த பெருந்தொகையான மக்கள் பாதுகாப்புக்கருதி கொக்குவில் இந்துக் கல்லூரியில் தஞ்சமடைந்தார்கள்.

1987 ஒக்டோபர் 24ஆம் திகதி காங்கேசன்துறை வீதி வழியாக யாழ். நகரம் நோக்கிக் கவச வாகனங்கள், டாங்கிகள் சகிதம் முன்னேறிய இந்தியப் படையினர் கொக்குவில் இந்துக் கல்லூரியை வந்தடைந்ததும், கவச வாகனங்களிலிருந்து அங்கு அடைக்கலம் புகுந்திருந்த பொதுமக்கள் தங்கியிருந்த பாடசாலைக் கட்டடங்கள் மேல் பீரங்கித் தாக்குதலை மேற்கொண்டனர்.

இதனால் பாடசாலை வகுப்பறையில் தங்கியிருந்த ஐம்பதுக்கும் மேற்பட்ட பொதுமக்கள் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்கள்.



உரிய முறைப்படி தகனம் செய்வதற்கான சூழ்நிலையில்லாததால் இறந்தவர்களின் சடலங்கள் கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் ஒரே குழியில் வைத்து அடக்கம் செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## நீர்த்தேக்கங்களின் வான்கதவுகள் திறப்பு

(க.கிஷாந்தன்)

களனி ஆற்றின் பிரதான கிளையாறான கெசல்கமுவ ஓயாவில் அமைக்கப்பட்ட இலங்கையின் முதலாவது மின் நீர்த்தேக்கமான காசல்ரீ நீர்த்தேக்கம் அதன் முழு கொள்ளளவையும் எட்டியுள்ள நிலையில், அதன் தானியங்கி வான் கதவுகள் திறக்கப்பட்டு நீர் வெளியேறி வருகின்றது.

இந்தத் தானியங்கி வான் கதவுகள் வழியாக நேற்று (24.10.2022) காலை முதல் நீர் வெளியேறி வருகின்றது.

இந்த நீரானது களனி ஆற்றின் நீர்மட்டத்தை வெகுவாக அதிகரிக்கும் என்பதல், காசல்ரீ நீர்தேக்கத்தின் கீழ்ப் பகுதியில் களனி ஆற்றின் கரையில் குடியிருப்பவர்களும் இந்த ஆற்றினை பயன்படுத்துபவர்களும் மிகவும் அவதானமாக செயற்பட வேண்டுமென நீர்த்தேக்கத்தின் கடமை நேர பொறியலாளர் தெரிவித்தார்.

தொடர்ந்து இப்பிரதேசத்தில் மழை பெய்து வருவதைத் தொடர்ந்து காசல்ரீ நீர்த்தேக்கத்திற்கு அதிகளவான நீர் விநியோகிக்கப்படுவதால் இந்தத் தானியங்கி வான் கதவுகள் அவ்வப்போது திறக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை, நேற்றுக் காலை 8 மணிக்கு மஸ்கெலியா - மவுஸ்ஸாக்கலை நீர்த்தேக்கத்தின் வான் கதவுகள் மூன்றும் ஒரே நேரத்தில் திறந்து விடப்பட்டுள்ளன.

இதனால் தாழ்நிலப் பகுதியில் உள்ள மக்களை மிகவும் அவதானமாக இருக்குமாறு அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், மவுஸ்ஸாக்கலை, கெனியோன், லக்ஷபான பொல்பிட்டிய, நவலக்ஷபான, விமலசுரேந்திர, மேல் கொத்மலை ஆகிய நீர்த்தேக்கங்களின் நீர்வரத்தும் அதிகரித்துள்ளது.

## தாயும் தந்தையும் வெவ்வேறு திருமணம்; மகன் வேறு குடும்பத்திடம் ஒப்படைப்பு

### களனி பகுதியில் சிறுவன் அனுபவித்த கொடுமைகள்

பெற்றோர்கள் இருவரும் வெவ்வேறு திருமணம் செய்ததால் அநாதரவான மகன், பிறிதொரு தம்பதியிடம் வளர்ப்பதற்காக ஒப்படைக்கப்பட்ட நிலையில், மிக மோசமான சித்திரவதைக்குள்ளான துயரச் சம்பவம் வெளிச்சத்திற்கு வந்துள்ளது.

உடல் முழுவதும் காயங்களுடன் காணப்பட்ட அந்த மாணவன், வளர்ப்பு பெற்றோரின் கொடுமையிலிருந்து தன்னை காப்பாற்றும்படி கதறி அழுதுள்ளார்.

இச்சம்பவம் தொடர்பில் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபைக்கு அறிவிக்கப்பட்டதையடுத்து, கிரிபத்கொடை பொலிஸார் மற்றும் களனி பிரதேச செயலக சிறுவர் பாதுகாப்பு உத்தியோகத்தர், பேலியகொடை பொலிஸ் சிறுவர் மற்றும் மகளிர் பணியகம் என்பன இணைந்து சட்ட நடவடிக்கை எடுத்துள்ளன.

தற்போது 15 வயதாகும் சிறுவன், கடந்த 4 வருடங்களாக கொடூரமான சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்டதற்கு ஆதாரமாக தலை முதல் கால் வரை காயங்கள் காணப்படுவதாகவும், மாணவனின் மன மற்றும் உடல் சிகிச்சைக்காக பொலிஸ் பாதுகாப்பில் கொழும்பு கோட்டை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும், மருத்துவ அறிக்கைகளின்படி சந்தேகநபர்களுக்கு எதிராக மேலதிக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் பேலியகொடை பொலிஸார் தெரிவித்தனர்.

தற்போது 15 வயதாகும் இந்த மாணவனின் பெற்றோர் பல வருடங்களின் முன்னர் வெவ்வேறு திருமணம் செய்துள்ளனர். இதனால் சிறுவன் நிர்க்கதியானார். தந்தை, மகனை தன்னுடன் கொண்டு செல்ல தயாராக இருக்கவில்லை. தாயார் ஆரம்பத்தின் மகனை தன்னுடன் வைத்திருந்த போதும், அவரது இரண்டாவது கணவர் அதை ஏற்கவில்லை. இதனால் இருவருக்குள்ளும் சச்சரவு ஏற்பட ஆரம்பித்தது.

இரண்டாவது திருமணத்தையும் முறிக்க விரும்பாத தாயார், மகனை பிறிதொரு இடத்தில் தங்க வைக்க முயற்சித்தார்.

இதன்படி, அப்போது ஆறாம் ஆண்டில் படித்துக் கொண்டிருந்த மகன், திஸ்ஸமஹாராமவில் வசிக்கும் பாட்டியின் (தாயின் தாய்) பராமரிப்பில் வைக்கப்பட்டார். மகனின் பராமரிப்பிற்காக மாதாந்தம் தந்தை ரூ.4500 கொடுத்து வந்தார்.

சில காலத்தின் பின்னர், தந்தை பணம் செலுத்துவதை நிறுத்தியதையடுத்து, பாட்டியினால் சிறுவனை வளர்க்க முடியாமல் போனது.

இதையடுத்து, தாயார் தனது மகனை குழந்தையில்லாத தம்பதியொன்றிடம் வளர்ப்பதற்காக ஒப்படைத்துள்ளார். களனி ஹுனுபிட்டிய திப்பிட்டிகொட பிரதேசத்தைச் சேர்ந்த தம்பதியின் கோரிக்கையின் பேரிலேயே குழந்தை ஒப்படைக்கப்பட்டது. அப்போது சிறுவனுக்கு 11 வயது.

வளர்ப்புப் பெற்றோரின் வீட்டிலிருந்த மாணவன், களனி தலுகம புனித பிரான்சிஸ் கல்லூரியில் இணைக்கப்பட்டார்.

கடந்த சில காலங்களாக மாணவன் பாடசாலைக்கு ஒழுங்காக வருவதில்லை. கற்றல் செயற்பாட்டிலும் பின்தங்கியிருந்தார்.

மாணவன் கடந்த வாரம் பல நாட்களாக பாடசாலைக்கு வரவில்லை. கடந்த



வெள்ளிக்கிழமை பாடசாலைக்கு வந்திருந்தார். இதன்போது மாணவனின் கன்னங்கள் மற்றும் மூக்கில் காயங்கள் இருப்பதைக் கண்ட வகுப்பாசிரியை, அவரிடம் இதுபற்றி விசாரித்தபோது, மாணவன் நேரடியாகப் பதிலளிக்காமல் குளியலறையில் விழுந்துவிட்டதாகக் கூறினார்.

ஆனால், இதனை ஆசிரியர் நம்பவில்லை. முகம், கன்னங்கள், மூக்கு என்பன தாக்குதலினால் பாதிக்கப்பட்டுள்ளதாக உறுதியாக நம்பினார். இது குறித்து அதிபரின் கவனத்திற்குக் கொண்டு சென்றார்.

இதையடுத்து, அதிபரும் ஆசிரியையும் மாணவனை அழைத்து, தகவல் கேட்டபோது, நான்கு வருடங்களாக தான் அனுபவித்த பாரிய சித்திரவதைகள் அனைத்தையும் தெரிவித்து கதறி அழுதுள்ளார்.

உடனடியாக செயற்பட்ட அதிபர் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் அவசர இலக்கத்திற்கு தகவல் வழங்கினார்.

வீட்டில் உறக்கமில்லையென்றும், சிறிது நேரம் உறங்கப் போவதாகவும் குறிப்பிட்டு மாணவன் பாடசாலையில் உறங்கியுள்ளார்.

சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை உத்தியோகத்தர்கள், கிரிபத்கொடை பொலிஸ் மற்றும் பேலியகொடை பொலிஸ் சிறுவர் மற்றும் மகளிர் பணியக உத்தியோகத்தர்களுடன் உடனடியாக பாடசாலைக்கு வந்ததையடுத்து, மாணவன் உறக்கத்திலிருந்து எழுந்து, இதுவரை தான் சந்தித்த கொடுமைகள் அனைத்தையும் அந்த மாணவன் பொலிஸாரிடம் கூறியுள்ளார்.

“சித்தி எப்போதுமே அடிப்பார். அந்த வீட்டில் உள்ள அனைவரின் அழுக்கு உடைகளையும் நானே துவைக்க வேண்டும். உள்ளாடைகளைக் கூட நான் துவைப்பேன்.

அவர்கள் தொலைக்காட்சி பார்க்கும் போது நான் அவர்களின் கால்களைப் பிடித்து விட வேண்டும். ஆடைகளைத் துவைத்தல், சப்பாத்து பொலிஷ் செய்தல், வீடு, முற்றம் சுத்தம் செய்தல், பாத்திரங்களை கழுவுதல் என்பனவற்றை செய்யவேண்டும். நான் அதிகாலையில் எழுந்து இதைச் செய்யாவிட்டால், அத்தை என்னை பெரிய எஸ்லோன் குழாய்களால் அடிப்பார். என் உடல் முழுவதும் காயங்கள் உள்ளன.

சித்திரவதைகளால் நான் அழுதால், தம்மை தொந்தரவு செய்யாமல் எங்காவது போய் செத்துத் தொலை என்று என் அத்தை எப்போதும் திட்டுவார். என் முதுகு முழுவதும், என் கைகள் மற்றும் கால்கள் வலிக்கின்றன.

சித்தியும், சித்தப்பாவும் உணவுப் பார்சல் பொதி செய்து விநியோகிக்கிறார்கள். நானே அவற்றையும் பொதி செய்யவேண்டும்.

நான்கு நாட்களுக்கு முன்பு, என் அத்தை என் மூக்கை இறுக்கமாக கிள்ளினார். நான் மிகவும் காயப்பட்டேன். மூக்கு வலியால் மூன்று நாட்களாக முகத்தைக் கழுவக்கூட முடியவில்லை. மூன்று நாட்களாக பாடசாலைக்கு வர அனுமதிக்கப்படவில்லை.

இன்று நான் வந்தபோது, என் முகத்தில் உள்ள தழும்புகளை பற்றி பாடசாலையில் யாரேனும் விசாரித்தால் குளியலறையில் விழுந்து காயமடைந்ததாகக் கூறும்படி சித்தி கூறினார். சித்தி, சித்தப்பாவின் தாக்குதல்களால் எனது கைகள் மற்றும் கால்கள் அனைத்தும் காயமடைந்துள்ளன.

தயவு செய்து என்னை சித்தியிடம் இருந்து காப்பாற்றுங்கள்” என அழுது கொண்டே குறிப்பிட்டுள்ளார்.

தத்தெடுத்த குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் மகனை இப்படி அடிப்பது பெற்ற தாய்க்கும் தெரிந்திருந்தது. அண்மையில், மாணவனின் பாடசாலை வருகை மோசமாக இருந்ததால், மாணவனை பொறுப்பேற்குமாறு அதிபர் அறிவுறுத்தினார், ஆனால், உயிரியல் தாய் அதைப் பொருட்படுத்தவில்லை.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகள் நடைபெற்று வருகின்றன.

# துறைநீலாவணைக்கு செல்லும் வீதியில் இறைச்சிக் கழிவுகள் வீச்சு

(வெல்லாவெளி நிருபர்-
க.விஜயரெத்தினம்)

துறைநீலாவணை கிராமத்திற்கு செல்லும் வீதியில் களுதாவளை பிரதேச சபையினால் நடப்பட்டுள்ள பெயர்ப்பலகைக்கு பக்கத்தில் மருதமுனை மற்றும் பெரியநீலாவணையைச் சேர்ந்த கோழிக்கடை உரிமையாளர்களால் கோழிக்கழிவுகள் தொடர்ச்சியாக வீசப்பட்டுவருவதாக துறைநீலாவணை கிராமத்தில் உள்ள பொதுமக்கள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் விசனம் தெரிவிக்கின்றார்கள்.

மட்டக்களப்பு மாவட்டத்தின் போக்குவரத்து வசதியற்ற எல்லைக் கிராமம் துறைநீலாவணை ஆகும். இங்கு 12,000க்கும் மேற்பட்ட பொது மக்கள் வாழ்கின்றார்கள். இங்குள்ள மக்களின்பிரதானபாதையாக இவ்வீதியை பயன்படுத்துகின்றார்கள். இவ்வீதியால் பொதுமக்கள், ஊடகவியலாளர்கள், மாணவர்கள், உயரதிகாரிகள் போன்றோர்கள் இப்பாதையில் பயணித்தாலும் இவ்வீதியில் கொட்டப்படும் கோழிக்கழிவுகளின் துர்நாற்ற வாடையினால் மூக்கைப் பொத்திக்கொண்டு பயணிப்பதை காணக்கூடியதாகவுள்ளது. இவ்வீதியில் சுமார் 20 வருடகாலமாக கோழிக்கழிவுகளையும் வீட்டுக்கழிவுகளையும் இலத்திரனியல் கழிவுகளையும் உக்கமுடியாத கழிவுகளையும் மாடுகளின் கழிவுகளையும் ஆமை



ஓடுகளையும் இவ்வாறு கோழிக்கடை உரிமையாளர்கள் மற்றும் மருதமுனை கிராமத்தில் உள்ளவர்கள் போன்றோர்கள் வீசிவருகின்றார்கள். இவ்வீதியில் இவ்வாறான கழிவுகளை வீசிய பலரை கையும் மெய்யுமாக பிடித்து எச்சரித்து அனுப்பிய சம்பவங்களும் குறிப்பிடத்தக்கதாகும்.

இவ்விடயமாக துறைநீலாவணை கிராமத்தில் உள்ள பொதுமக்கள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் ஒன்றிணைந்து களுதாவளை பிரதேச சபையின் தவிசாளர், செயலாளர் மற்றும் கல்முனை மாநகரசபையின் முதல்வருக்கு தெரியப்படுத்தி கோழிக்கழிவுகள் கொட்டுவது நிறுத்தப்பட்டிருந்தது. இருந்தும் சுமார் ஆறுமாத காலமாக தொடர்ச்சியாக கோழிக்கழிவுகள் கொட்டப்படுவதாக துறைநீலாவணை பொதுமக்கள் விசனம் தெரிவிக்கின்றார்கள். இவ்வாறு கொட்டப்படும் கழிவுகளை மருதமுனையைச் சேர்ந்த கோழிக்கடை உரிமையாளர்கள் நிறுத்த வேண்டும்.

அவ்வாறு நிறுத்தப்படாவிட்டால் துறைநீலாவணை கிராமத்தில் உள்ள அமைப்புக்களின் பிரதிநிதிகள், பொதுமக்கள், ஊடகவியலாளர்கள், முச்சக்கர வண்டி உரிமையாளர்கள் ஒன்றிணைந்து கவனயீர்ப்பு போராட்டத்தை முன்னெடுப்பதோடு சில தீர்க்கமான சட்ட நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டிய தேவைப்பாட்டில் துறைநீலாவணை மக்கள் இருக்கின்றார்கள். இதனை சிந்தித்து மருதமுனை கிராமத்தில் உள்ள மதத்தலைவர்கள், புத்திஜீவிகள், அரசியல் வாதிகள், கல்முனை மாநகரசபை முதல்வர், களுதாவளை பிரதேசசபை தவிசாளர், செயலாளர், களுவாஞ்சிகுடி பிரதேச செயலாளர், மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர், மாவட்டங்களின் அபிவிருத்திக் குழுத்தலைவர், கிழக்கு மாகாண ஆளுநர், கிழக்கு மாகாண பிரதி பொலிஸ்மா அதிபர், விசேட அதிரடிப்படையின் கட்டளை அதிகாரிகள் இணைந்து கோழிக்கழிவுகளை வீசுவதை தடை செய்வதற்கு காத்திரமான நடவடிக்கை எடுக்க வேண்டும் என துறைநீலாவணை பொது மக்கள் கோரிக்கை முன்வைக்கின்றனர்.

# இறக்காமம் பிரதேச செயலகத்தில் காணி அளிப்புப் பத்திரங்கள் வழங்கிவைப்பு

(திகாமடுல்ல நிருபர்)



இறக்காமம் பிரதேச செயலகப் பிரிவில் மிக நீண்ட காலமாக இருந்துவரும் காணி அனுமதிப்பத்திரம் வழங்கல் மற்றும் அவை தொடர்பான பிரச்சினைகளுக்கு பிரதேச செயலாளர் அஷ்ஷெய்க் எம்.எஸ்.எம். ரஷ்ஷான் (நளீமி) வழிகாட்டலில் துரிதகதியில் உடனடி தீர்வுகள் மற்றும் வழிகாட்டல்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

இறக்காமம் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட பிரிவுகளில் நீண்டகாலமாகக் குடியிருந்துவரும் மக்களுக்கு காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் கீழ், காணி அளிப்புப் பத்திரங்கள் (உறுதி) வழங்கப்பட்டு வருகின்றன.

புதிதாக அளிப்புப் பத்திரங்கள் (உறுதி) கிடைக்கப்பெற்றவர்களுக்கான அளிப்புப் பத்திரம் வழங்கிவைக்கும் நிகழ்வு, பிரதேச செயலாளர் அஷ்ஷெய்க் எம்.எஸ்.எம். ரஷ்ஷான் (நளீமி) தலைமையில் பிரதேச செயலக கூட்ட மண்டபத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் உதவிப் பிரதேச செயலாளர் எம்.ஏ.சி. அஹமட் நசீல் உட்பட காணி உத்தியோகத்தர் என்.எல்.எம். மாஹிர், காணிப் பிரிவு உத்தியோகத்தர்கள் மற்றும் பயனாளிகளும் கலந்து கொண்டனர்.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

# அம்பாறையில் தீபாவளி அமைதியான முறையில்





(வி.சுகிர்தகுமார்)

உலகவாழ் இந்து மக்களால் கொண்டாடப்படும் தீபாவளி பண்டிகை இம்முறை இலங்கை வாழ் இந்து மக்களாலும் அமைதியான முறையில் கொண்டாடப்பட்டது.

இதற்கமைவாக, அம்பாறை மாவட்ட மக்களும் தீபாவளியினை பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் கொண்டாடி வருகின்றனர்.

அக்கரைப்பற்று ஸ்ரீவம்மியடிப்பிள்ளையார் ஆலயத்திலும், அக்கரைப்பற்று ஸ்ரீமுத்துமாரியம்மன் ஆலயத்திலும் விசேட பூஜைகள் இடம்பெற்றன.

ஆயினும், பக்தர்களின் வருகை குறைவடைந்த நிலையில் குறிப்பிட்ட பக்தர்களின் பிரசன்னத்தோடு வழிபாடுகள் இடம்பெற்றன.

ஆலய பிரதமகுரு சிவஸ்ரீ ப.கு.கேதீஸ்வரக்குருக்கள் மற்றும் சிவஸ்ரீ க.தவேந்திரக்குருக்கள் ஆகியோர் பூஜை வழிபாடுகளை நடத்தி வைத்தனர்.

இதேநேரம் நரகாசூரன் எனும் மகா கொடிய அரக்கனை மகாலட்சுமி துணையுடன் திருமால் வதம் செய்து அழித்தொழித்த பெருமைக்குரிய இத்திருநாளில் வேற்றுமை அகன்று நாட்டு மக்கள் அனைவரும் ஒற்றுமையுடன் வாழவேண்டும் எனவும் பொருளாதார நெருக்கடியில் இருந்து நாடு மீளவேண்டும் எனவும் அமைதியான முறையில் பிரார்த்தனை வழிபாடுகளிலும் மக்கள் ஈடுபட்டனர்.

பின்னர் பிரதமகுரு உள்ளிட்ட பெரியோர்களிடம் சிறியவர்கள் ஆசீர்வாதத்தினை பெற்றுக்கொண்டனர்.

# பாண்டிருப்பு நிருபரின் சகோதரர் காலமானார்

(வெல்லாவெளி நிருபர்-
க.விஜயரெத்தினம்)



பாண்டிருப்பு நிருபர் துஸ்யந்தனின் சகோதரர் முருகேசு நேசராஜா தனது 64 ஆவது வயதில் சனிக்கிழமை (22) இரவு கல்முனை ஆதார வைத்திய சாலையில் காலமானார்.

இவர் கல்முனை பாண்டிருப்பை பிறப்பிடமாகவும்,பெரியநீலாவணையை வசிப்பிடமாகவும் கொண்ட மூன்று பிள்ளைகளின் தந்தையாவார். இலங்கை மின்சார சபையின் கல்முனைக்கிளையில் மாணி வாசிப்பாளராக கடமையாற்றிய இவர் தற்போது ஓய்வு பெற்றநிலையில், சுகயீனம் காரணமாக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் சிசிச்சை பலனின்றி காலமானார்.

அன்னாரின் இறுதிச்சடங்கில் கல்முனை மாநகரசபை உறுப்பினர்கள், பிரதேச அரசியல் வாதிகள், ஆலயங்களின் தலைவர்கள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், ஊடகவியலாளர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

# உழவு இயந்திரம் தடம்புரண்டு குடும்பஸ்தரொருவர் பலி

**மணல்பிட்டியில் சம்பவம்**

(மண்முனை நிருபர்)



மட்டக்களப்பு, கொக்கட்டிச்சோலை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட மணல்பிட்டி பிரதேசத்தில் உழவு இயந்திரம் தடம்புரண்டதில் குடும்பஸ்தர் ஒருவர் கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை (23) பலியானதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

40ஆம் கிராமம், வம்மியடியூற்று திக்கோடை பிரதேசத்தைச் சேர்ந்த சண்முகம் வினோராஜ் (வயது 31) என்பவரே இவ்விபத்தில் பலியானவராவார்.

சம்பவ தினத்தன்று தனது தாயாரின் வீடான பண்டாரியவெளி பிரதேசத்தில் இருந்து தனது வீட்டுக்கு தனது உழவு இயந்திரத்தில் பயணித்துக்கொண்டிருக்கும் போது உழவு இயந்திரம் கட்டுப்பாட்டை இழந்து தடம் புரண்டதில் படுகாயமடைந்த நிலையில், மகிழடித்தீவு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டபோது சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளதாகவும் குறித்த நபர் கடந்த மாதம் திருமணமானவர் எனவும் பொலிஸாரின் ஆரம்பக்கட்ட விசாரணைகளின்போது தெரியவந்துள்ளது.

மட்டக்களப்பு நீதிமன்ற பதில் நீதிவானின் உத்தரவிற்கமைவாக, சம்பவ இடத்திற்கு சென்ற மண்டூர் பிரதேச திடீர் மரண விசாரணை அதிகாரி தம்பிப்பிள்ளை தவக்குமார் சடலத்தினை பார்வையிட்டார். பிரேத பரிசோதனையின் பின்னர் நெருங்கிய உறவினர்களிடம் ஒப்படைக்கும்படி பொலிஸாருக்கு உத்தரவிட்டார். சம்பவம் பற்றிய மேலதிக விசாரணைகளை வவுணதீவு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# பலதுறைகளில் பிரகாசித்தவர்களை பாராட்டி கௌரவித்த ‘மாளிகை மரகதங்கள் –2022’



(எம்.என்.எம். அப்ராஸ், ஐ.எல்.எம். நாஸிம்)

மாளிகைக்காடு பிரதேசத்திலிருந்து பல்கலைக்கழகத்திற்கு மாவட்ட அளவில் முதலிடம் பெற்று தெரிவானோர் அடங்களாக பலதுறைகளில் பிரகாசித்தவர்களை பாராட்டி கௌரவிக்கும் ‘மாளிகை மரகதங்கள் -2022’ நிகழ்வு அல்- மீஸான் பௌண்டேஷன் ஸ்ரீலங்காவின் ஏற்பாட்டில் அல்- ஹுசைன் பழைய மாணவர்களின் ஒருங்கமைப்பில் கிழக்கு மாகாண கணனி தொழில்நுட்ப பேரவை பணிப்பாளரும், அல்- மீஸான் பௌண்டேஷன் ஸ்ரீலங்காவின் தவிசாளருமான யூ.எல்.என். ஹுதா உமரின் தலைமையில் மாளிகைக்காடு அல்- ஹுசைன் வித்தியாலய கேட்போர் கூடத்தில் விமர்சையாக இடம்பெற்றது.

சாதனையாளர்களும், அதிதிகளும் கலாசார அம்சங்களுடனான முறையில் வரவேற்கப்பட்டு இடம்பெற்ற இந்நிகழ்வில், மெட்ரோ பொலிட்டன் கல்லூரியின் தவிசாளரும், கல்முனை மாநகர சபை முன்னாள் முதல்வருமான கலாநிதி சிராஸ் மீராசாஹிப் பிரதான அதிதியாகவும், கல்முனை வலயக்கல்வி பணிப்பாளர் எம்.எஸ். சஹுதுல் நஜீம் முன்னிலை அதிதியாகவும் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வில் காரைதீவு பிரதேச செயலாளர் எஸ். ஜெகராஜன், சாய்ந்தமருது பிரதேச செயலாளர் எம்.எம். ஆசிக், வீதி அபிவிருத்தி அதிகார சபை நிறைவேற்று பொறியியலாளர் இசட்.ஏ.எம். அஸ்மீர், வீதி அபிவிருத்தி திணைக்கள நிறைவேற்று பொறியியலாளர் எம்.எம்.எம். முனாஸ், உதவிக்கல்வி பணிப்பாளர்களான ஜிஹானா ஆலிப், நஸ்மியா சனூஸ், கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் STD பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் தில்ஷான் நிஸாம், உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள், கல்முனை வலயக்கல்வி அலுவலக உத்தியோகத்தர்கள், பிரதேச பாடசாலை அதிபர்கள் மற்றும் பிரதி அதிபர்கள், பள்ளிவாசல் நிர்வாகிகள், பொது அமைப்புக்களின் பிரதானிகள், அல்- மீஸான் பௌண்டேஷன் ஸ்ரீலங்காவின் நிறைவேற்றுக்குழு மற்றும் செயற்குழு உறுப்பினர்கள், அல்- ஹுசைன் பழைய மாணவர்கள், பொதுமக்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர்.

# பல்கலை சமூகத்தை நோக்கி செல்லவேண்டும்; சமூகம் பல்கலைக்கழகத்தை நோக்கி வரவேண்டும்!

## தென்கிழக்கு உபவேந்தர் பேராசிரியர் றமீஸ் தெரிவிப்பு





(நூருல் ஹுதா உமர்)

மூதூர் நத்வதுல் உலமா அரபிக்கல்லூரியின் நிர்வாகத்தினர், தங்களது 60 வருடம் பழைமையான அரபிக்கல்லூரியில் அமைக்கப்பட்டுள்ள புதிய மூன்று மாடிக் கட்டடத்தில் நவீன நூலகம் ஒன்றை அமைப்பது பற்றி தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் உபவேந்தர் பேராசிரியர் றமீஸ் அபூபக்கர் தலைமையில் உபவேந்தர் அலுவலகத்தில் கலந்துரையாடலில் ஈடுபட்டனர்.

இந்நிகழ்வில் தென்கிழக்குப் பல்கலைக்கழகம் சார்பாக நூலகர் எம்.எம்.றிபாயுத்தீன், சிரேஷ்ட உதவி நூலகர்களான எம்.சி.எம்.அஸ்வர், கலாநிதி எம்.எம்.மஷ்ரூபா, ஏ.எம்.நஹ்பீஸ், எஸ்.எல்.எம்.சஜீர் ஆகியோரும் நத்வதுல் உலமா அரபிக்கல்லூரியின் நிர்வாகத்தினரும் கலந்துகொண்டனர். இதன்மூலம் இரு தரப்புக் கலந்துரையாடல்களில் இப்பிரதேசத்திலுள்ள அரபிக்கல்லூரி நூலகங்களை மேம்படுத்துவதற்கு வதிவிடப் பயிற்சிப் பட்டறையொன்று அவசியம் என பல்கலைக்கழக நூலகர் எம்.எம்.றிபாயுத்தீனால் முன்வைக்கப்பட்டது. இதன்போது தென்கிழக்குப் பல்கலைக்கழக உபவேந்தர் தனது கருத்தை தெரிவிக்கையில்,

பல்கலைக்கழகம் சமூகத்தை நோக்கி செல்லவேண்டும். சமூகம் பல்கலைக்கழகத்தை நோக்கி வரவேண்டும் அப்போதுதான் தமது சமூகப் பங்களிப்பினை நிறைவேற்றிக் கொள்வதற்கு இச்செயற்றிட்டம் ஒரு வாய்ப்பாக அமையும் என்றும் இத்திட்டம் மிகவும் திறம்பட இயங்குவதற்கு தன்னாலான முழு ஒத்துழைப்பையும், இடவசதிகளையும் மற்றும் வளவாளர்களையும் வழங்குவதாகவும் குறிப்பிட்டார். மேலும், இக்கலந்துரையாடல் முடிவில் குறித்த இப்பயிற்சிக்கான முன்னெடுப்புகளை வெற்றிகரமாக நடத்தி முடிப்பதற்கும் இச்செயற்றிட்டத்தை தாங்களே செய்வதற்கும் நத்வதுல் உலமா அரபிக் கல்லூரியின் நிர்வாகக் குழுவினர் ஏற்றுக் கொண்டனர்.



அதேவேளை நூலக மற்றும் பயிற்சிப் பட்டறையின் குறிக்கோள்கள், எதிர்பார்க்கப்படும் அடைவுகள், இலக்குகளையும் நிர்வாகக் குழுவினர் மற்றும் குறித்த திட்டத்தின் நிலைபேறான தன்மை போன்ற விடயங்களும் கலந்துரையாடப்பட்டு முடிவுகள் எட்டப்பட்டன.







தீபாவளிப் பண்டிகையை முன்னிட்டு அம்பாறை மாவட்டத்தில் பல்வேறு பகுதிகளிலுள்ள ஆலயங்களில் விசேட பூஜைகள் நடைபெற்றன. காரைதீவு ஸ்ரீ கண்ணகை அம்மன் ஆலயத்தில் தீபத்திருநாள் விசேட பூஜை ஆலய பிரதமகுரு சிவஸ்ரீ சண்முக மகேஸ்வர குருக்கள் தலைமையில் நடைபெற்றன, இந்தப் பூஜை வழிபாடுகளில் பக்த அடியார்கள் கலந்துகொண்டதைப் படங்களில் காணலாம்.

(காரைதீவு நிருபர்)

# மாமாங்கேஸ்வரர் ஆலயத்தில் தீபத்திருநாள் விசேட பூஜைகள்





(கல்லடி நிருபர்)

தமிழர்களின் தீபத்திருநாளாம் தீபாவளித் திருநாளை முன்னிட்டு, நேற்று (24) காலை மட்டக்களப்பிலுள்ள ஆலயங்களில் விசேட பூஜை வழிபாடுகள் நடைபெற்றன.

அந்த வகையில் கிழக்கிலங்கையில் வரலாற்றுச் சிறப்புமிக்க மட்டக்களப்பு ஸ்ரீமாமாங்கேஸ்வரர் ஆலயத்தில் பக்தர்கள் புடைசூழ, ஆலய பிரதமகுரு சிவஸ்ரீ ஆதிசௌந்தரராஜா குருக்கள் தலைமையில் விசேட பூஜை வழிபாடுகள் இடம்பெற்றன.

இதன்போது நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள பொருளாதார சிக்கல் நிலை நீங்கி, மக்கள் நிம்மதியோடும், சந்தோஷத்தோடும் வாழ வேண்டி விசேட யாகம் மற்றும் அபிஷேகம் என்பன நடத்தப்பட்டன.

நேற்றைய தினம் இடம்பெற்ற பூஜை வழிபாடுகளில் மட்டக்களப்பு மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் பெருமளவிலான மக்கள் வந்து கலந்துகொண்டிருந்தனர்.

# ஐஸ் போதைப்பொருளை வைத்திருந்தவர் அதிரடிப்படையினரால் கல்முனையில் கைது



ஐஸ் போதைப்பொருளை தம் வசம் வைத்திருந்த சந்தேக நபரை கல்முனை விசேட அதிரடிப்படையினர் கைதுசெய்துள்ளனர்.

அம்பாறை மாவட்டம் கல்முனை விசேட அதிரடிப்படை முகாமிற்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவல் ஒன்றினை அடுத்து ஞாயிற்றுக்கிழமை (7) மாலை அக்கரைப்பற்று பொலிஸ் பிரிவிற்குட்பட்ட அட்டாளைச்சேனை ஆளங்குளம் வீதியில் வைத்து சந்தேக நபர் விசேட அதிரடிப்படையினர் மேற்கொண்ட தேடுதலில் கைதானார்.


இவ்வாறு கைதான நபர் அட்டாளைச்சேனை-5 பகுதியை சேர்ந்த 73 வயது மதிக்கத்தக்கவர் என்பதுடன், சந்தேக நபர் வசமிருந்து ஐஸ் போதைப்பொருள் 9 கிராம் 880 மில்லிகிராம் உட்பட சந்தேக நபர் பாவித்த கைத்தொலைபேசி என்பன விசேட அதிரடிப்படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

இச்சோதனை நடவடிக்கையின்போது விசேட அதிரடிப்படையின் கட்டளை அதிகாரி பிரதிப் பொலிஸ் மா அதிபர் வருண ஜெயசுந்தரவின் பணிப்புரைக்கமைய அம்பாறை வலயக்கட்டளை அதிகாரி சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சில்வெஸ்டர் விஜேசிங்கவின் அறிவுறுத்தலுக்கமைய அம்பாறை மாவட்ட பதில் கட்டளை அதிகாரியும் மட்டக்களப்பு மாவட்ட உதவி பொலிஸ் அத்தியட்சகருமான நளீன் பெரேரா ஆகியோரின் வழிகாட்டலில் கல்முனை விசேட அதிரடிப்படை முகாம் பொறுப்பதிகாரியும் பொலிஸ் பரிசோதகருமான ஆர்.ஏ.டி.சி.எஸ்.ரத்னாயக்க மேற்பார்வையில் உப பொலிஸ் பரிசோதகர் எச்.ஜி.பி.கே நிஸ்ஸங்க உள்ளிட்ட பொலிஸ் சார்ஜன்ட் பண்டார (13443) பொலிஸ் கான்டபிள்களான ராஜபக்ஷ (24812) அபேரட்ன (75812) நிமேஸ் (90699) பியுமக (94143) சாரதி குணபால (19401) அதிகாரிகள் இந்நடவடிக்கையை முன்னெடுத்து சந்தேக நபரை கைதுசெய்தனர்.

பின்னர் கைதுசெய்யப்பட்ட நபர்கள் சான்று பொருட்களுடன் அக்கரைப்பற்று பொலிஸாரிடம் விசேட அதிரடிப்படையினர் நீதிமன்ற நடவடிக்கைக்காக பாரப்படுத்தியமை குறிப்பிடத்தக்கது.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

## போடியார் புலம்பல்!




தேர்தல உரிய நேரத்தில நடத்தாமல் அரசு பிற்போடுகிறதாம் எண்டு ஹக்கீம் நானா சொல்லியிருக்காரு எலுவா?

அவரும் கடந்த நல்லாட்சி அமைச்சராக இருந்த காலத்துக்கு முந்தி காலம் எல்லாம் அமைச்சராக இருக்ககுள மாகாணசப தேர்தல நடத்தாம பண்ணக்குள வாய பொத்தி இருந்தவர் எலுவா ஹக்கீம் நானா.!

இப்ப ஏதோ புதுசா கத உடுறாரு..!

# தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு செயலமர்வு





( மீராவோடை நிருபர்)

கோறளைப்பற்று மத்தி பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட நாவலடி அந்-நூர் அகடமியில் வாசிப்பின் முக்கியத்துவம் தொடர்பான ஒருநாள் செயலமர்வொன்று அண்மையில் இடம்பெற்றது.

தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு அந்-நூர் கலை, கலாசார மன்றத்தின் ஏற்பாட்டில் இந்நிகழ்வு கல்லூரியின் பிரதி அதிபர் எம்.எல்.எம். நஷீத் (மதனி) தலைமையில் கல்லூரி கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இதில், "தனி மனித ஆளுமை விருத்தியில் வாசிப்பின் வகிபாகம்" எனும் தலைப்பில் கோறளைப்பற்று மத்தி பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தர் ஏ.எல்.பீர் முஹம்மட் (காஸிமி), "வாசிப்பும் நூலகமும்" எனும் தலைப்பில் அந்-நூர் அகடமியின் ஆசிரியர் ஏ.எஸ்.இர்ஷாத், "வாசிப்பு ஓர் இபாதத்" எனும் தலைப்பில் காவத்தமுனை அல்-அமீன் வித்தியாலயத்தின் ஆசிரியரும், ஊக்குவிப்புப் பேச்சாளருமான எஸ்.ரமீஸ் பர்ஸான் மற்றும் "வாசிப்பால் நாம் அடையும் நன்மைகள்" எனும் தலைப்பில் கோறளைப்பற்று மேற்கு ஓட்டமாவடி பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தர் எஸ்.ஏ. நளீம், "வாசிப்பும் அதன் நுட்பங்களும்" எனும் தலைப்பில் பிரபல எழுத்தாளரும், சமூக செயற்பாட்டாளரும், வழித்தடம் காலாண்டு சஞ்சிகைவின் பிரதம ஆசிரியருமான சிராஜ் மஷூர் ஆகியோர் வளவாளர்களாக கலந்துகொண்டு கருத்துரைகளை வழங்கினர்.

# தொற்றா நோய்களுக்கான இரத்தப் பரிசோதனை






(கோணாவத்தை நிருபர்)

அட்டாளைச்சேனை வை.எம்.எம்.ஏ. அனுசரணையுடன் அட்டாளைச்சேனை பிரதேச வைத்தியசாலையின் ஏற்பாட்டில் கோணாவத்தையில் பி.எஸ்.எஸ்.பி. திட்டத்தின் மூலம் தொற்றா நோய்களுக்கான இரத்தப் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன.

அகில இலங்கை வை.எம்.எம்.ஏ.பேரவையின் நிரந்தர அங்கத்துவ உறுப்பினர் எம்.ஐ.உதுமாலெப்பை பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு பி.எஸ்.எஸ்.பி. திட்டத்தை ஆரம்பித்து வைத்தார்.

இதன்போது வருகை தந்த 35 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கு இருதய, சிறுநீரக, நீரிழிவு போன்ற நோய்களுக்கான இலவச இரத்தப் பரிசோதனைகள் மேற்கொள்ளப் பட்டன. அட்டாளைச்சேனை பிரதேச வைத்தியசாலையின் ஏற்பாட்டில் இதுவரையில் இப்பிரதேசத்தில் சுமார் 2600 பேருக்கு இலவசமாக இப்பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வில் அகில இலங்கை வை.எம்.எம்.ஏ. பேரவையின் அம்பாறை மாவட்டப் பணிப்பாளர் எம்.ஐ.எம்.றியாஸ், அட்டாளைச்சேனை வை.எம்.எம்.ஏ.பொருளாளர் ஏ.எம்.சுலைமா லெப்பை, ஆலோசகர் ஏ.எல்.கியாஸ்தீன் உட்பட உத்தியோகத்தர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

# திண்மக்கழிவுப் பசளை உற்பத்தி நிலையத்தின் செயற்பாடுகள் மீள ஆரம்பிக்க நடவடிக்கை

## கல்முனை மாநகர சபை செயற்றிட்டம்





(நூருல் ஹுதா உமர்)

கல்முனை மாநகர சபைக்கு சொந்தமான பெரியநீலாவணை திண்மக்கழிவு பசளை உற்பத்தி நிலையம் சில காலம் செயற்படாமல் இருந்து வந்தது. கல்முனை பிராந்திய விவசாயிகளுக்கு சேதனப் பசளையின் தேவை அதிகமாக உள்ளதால் மீண்டும் இந்த நிலையத்தை இயக்குவதற்கான நடவடிக்கைகளின் ஆரம்பப் பணி ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

கல்முனை மாநகர சபை பிரதம சுகாதார வைத்திய அதிகாரி டொக்டர் எம்.ஜே.கே.எம். அர்ஷத் காரியப்பர் தலைமையில் இந்தப் பணிகள் நேற்று ஆரம்பித்து வைக்கப்பட்டன.



இந்நிகழ்வில் கல்முனை மாநகர சபை சுகாதாரப் பிரிவு பிரதம முகாமைத்துவ உத்தியோகத்தர் யூ.எம்.இஸ்ஹாக், சுகாதார மேற்பார்வை உத்தியோகத்தர் எம்.ஏ.அதுகம் உட்பட கல்முனை மாநகர சபை ஊழியர்கள் கலந்துகொண்டனர்.

# விலை குறைக்கப்பட்ட பொருட்களைப் பெறுவதில் மக்களுக்கு ஏமாற்றம்

(பாண்டிருப்பு நிருபர்)

மட்டு - அம்பாறை ஆகிய மாவட்டங்களில் தன்னிச்சையாக பொருட்களின் விலைகளை கூட்டி விற்பனை செய்யும் வர்த்தகர்கள், வியாபாரிகளுக்கு எதிராக நுகர்வோர் அதிகாரசபை உத்தியோகத்தர்கள் சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டுமென நுகர்வோர் கோரிக்கை விடுக்கின்றனர் .

தற்போது நாட்டில் நிலவும் பொருளாதார நெருக்கடி காரணமாக மக்கள் பல்வேறு சிரமங்களுக்குள்ளாகி வருகின்றனர். இதனால் சாதாரண மக்கள் தங்களது வயிற்றுப் பசியை கூட தீர்க்கமுடியாது வறுமையில் சிக்கித் தவிக்கின்றனர். இன்றைய பொருளாதார நெருக்கடியை தமக்கு சாதகமாக பயன்படுத்தும் வர்த்தகர்கள், வியாபாரிகள் கட்டுப்பாட்டு விலைகளை மீறி அவரவருக்கேற்ப பொருட்களை விற்பனை செய்துவருகின்றனர்.

தற்போது சீனி, பருப்பு, அரிசி போன்றவற்றின் விலைகள் குறைக்கப்பட்டிருப்பதாக அமைச்சரவைப் பேச்சாளர்களினால் கூறப்பட்ட போதிலும் விலை குறைக்கப்பட்ட பொருட்களை கடைகளில் பெறுவதில் பொதுமக்கள் மிகுந்த சிரமங்களுக்குள்ளாகியுள்ளனர். பல கடைகளில் பழைய விலைகளிலேயே சீனி, பருப்பு போன்றவை விற்பனை செய்யப்படுவதாக மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

பிரதேச நுகர்வோர் உத்தியோகத்தர்கள், பெரும் வர்த்தக நிலையங்கள் மற்றும் உள்ளூர் வியாபார நிலையங்களை பரிசோதனை செய்து விலை அதிகரித்து விற்பனை செய்யும் வர்த்தகர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் என பொதுமக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

# முறக்கொட்டாஞ்சேனையில் இரு கவிதை நூல்கள் வெளியீடு

(பைஷல் இஸ்மாயில்)




தமிழ்ச் சங்கம் பாரம்பரிய கிராமிய கலை மன்றத்தின் ஏற்பாட்டில் மட்டக்களப்பு முறக்கொட்டாஞ்சேனை மண்ணிலிருந்து முறையூர் மங்கேஷ்வரனின் (இந்திரன் மங்கேஷ்) கவிதை நூல்களான மனதோடு பேசும் மௌனங்கள், மகிழம்பூக்கள் ஆகிய இரு நூல்களின் வெளியீட்டு நிகழ்வு எதிர்வரும் 29 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு செங்கலடி வசந்த் என்ஜோய் ஹோட்டலில் இடம்பெறவுள்ளது.

முறக்கொட்டாஞ்சேனை ஆர்.கே.எம். வித்தியாலய அதிபர் மயில்வாகனம் தவனேஸ்வரனின் தலைமையில் இடம்பெறவுள்ள இந்நூல் வெளியீட்டு விழாவுக்கு முதன்மை அதிதியாக கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் மாகாணப் பணிப்பாளர் சரண்யா சுதர்சன், கௌரவ அதிதியாக கோறளைப்பற்று தெற்கு கிரான் பிரதேச செயலாளர் ரி.ராஜ்பாபு, கல்குடா வலயக்கல்விப் பணிப்பாளர் ரி.ரவி உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டு சிறப்பிக்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# நடப்பு சம்பியனை எதிரணியின் சொந்த மண்ணில் வீழ்த்துமா இலங்கை?

## ஆஸி. – இலங்கை அணிகள் இன்று மோதல்




(ஏ.அகீல் சிஹாப்)

நடப்பு ஐ.சி.சி. இருபதுக்கு 20 உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடரின் 'சுப்பர் 12' சுற்றுப் போட்டிகள் மிகவும் விறுவிறுப்பாக நடைபெற்றுவரும் நிலையில், இலங்கை அணி தமது இரண்டாவது போட்டியில் இன்றைய தினம் அவுஸ்திரேலிய அணியை எதிர்கொள்கிறது. இந்த ஆட்டம் அவுஸ்திரேலியாவின் பெர்த் நகரில் நடைபெறும் நிலையில், இலங்கை நேரப்படி மாலை 4.30 மணிக்குப் போட்டி ஆரம்பமாகிறது.

இருபதுக்கு 20 உலகக்கிண்ணத் தொடரில் முதல் சுற்றில் விளையாடி குழு 'ஏ'யில் முதலிடத்தைப் பிடித்து சுப்பர் 12 சுற்றில் குழு ஒன்றில் இடம்பிடித்துள்ள இலங்கை அணி தனது முதல் ஆட்டத்தில் நேற்று முன்தினம் அயர்லாந்து அணியை எதிர்கொண்டது. இந்த ஆட்டத்தில் இலங்கை அணி 9 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றியைப் பதிவு செய்து சிறந்த ஆரம்பத்தைப் பெற்றது. அது மாத்திரமல்லாமல் குறித்த போட்டியில் சிறந்த நெட் ரன்ரேட் பெறுமானமும் இலங்கை அணிக்கு கிடைத்தது.

நடப்பு சம்பியனான அவுஸ்திரேலிய அணி தங்களது முதல் போட்டியில் நியூசிலாந்து அணியிடம் படுதோல்வியை சந்தித்த நிலையில், இன்று நடைபெறுகின்ற போட்டியில் கட்டாய வெற்றியை நோக்கி இலங்கை அணியை எதிர்த்தாடுகிறது. அவுஸ்திரேலிய அணி இன்றைய போட்டியில் தோல்வியுறும் பட்சத்தில் அந்த அணிக்கு அரையிறுதி சுற்றுக்குத் தகுதிபெறும் வாய்ப்பு குறைந்து கொண்டே செல்லும்.

மறுமுனையில் இலங்கை அணி இன்று நடைபெறுகின்ற போட்டியில் அவுஸ்திரேலிய அணி வீழ்த்தும் பட்சத்தில் அரையிறுதிப் போட்டிக்கு தகுதி பெறுவதற்கான வாய்ப்பு சற்று பிரகாசமாக காணப்படும். அவுஸ்திரேலிய அணி கடந்த ஜூன் மாதம் இலங்கைக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டு 3 போட்டிகள் கொண்ட இருபதுக்கு 20 சர்வதேச தொடரில் விளையாடி தொடரை 2 - 1 என்ற அடிப்படையில் கைப்பற்றியிருந்தது.

எனினும், இலங்கை அணி தற்போது சிறந்த போர்மில் காணப்படுவதால் இன்று நடைபெறுகின்ற போட்டி விறுவிறுப்புக்கு பஞ்சம் இல்லாத வகையில் அமையும் என்பதில் எந்தவிதமான சந்தேகமும் இல்லை. எனவே, இலங்கை அணி இந்த போட்டியில் வெற்றி பெறுமா என்பதைப் பொறுத்திருந்து பார்க்கலாம்.

ICC MEN'S T20 WORLD CUP AUSTRALIA 2022





எங்கள் சிங்கங்களை வாழ்த்திட நீங்களும் இணைந்துக்கொள்ளுங்கள்
QR குறியீட்டை Scan செய்து உங்கள் வாழ்த்துகளை பதிவு செய்யுங்கள்
Sri Lanka Cricket
தேசிய கிரிக்கெட் அணியின் உத்தியோகப்பூர்வ அனுசரணையாளர்
Dialog
எதிர்காலம் இன்றே.

Champion
Germ Fighting Real Soap

## "கோஹ்லியை வீழ்த்த வேண்டும் என்பதற்காகத்தான் வேகப்பந்துவீச்சாளர்களை முன்கூட்டியே பயன்படுத்தினோம்"

### தோல்வியின் பின்னர் பாபர் தெரிவிப்பு




உலகின் எதிர்பார்ப்பு மிக்க கிரிக்கெட் போட்டியான இந்திய – பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான ஆட்டம் நேற்று முன்தினம் 90 ஆயிரத்துக்கும் மேற்பட்ட ரசிகர்கள் பட்டாளத்துக்கு மத்தியில் மெல்போர்ன் கிரிக்கெட் மைதானத்தில் நடைபெற்றது. இந்த ஆட்டத்தில் இந்திய அணி இறுதிப்பந்தில் த்ரில் வெற்றிபெற்றது. இறுதி ஓவரில் 16 ஓட்டங்கள் தேவைப்பட்ட நிலையில் அதனை இந்திய அணி கடந்தது.

இப்போட்டியில் ஏற்பட்ட தோல்வியின் பின்னர் பேசிய பாகிஸ்தான் அணியின் தலைவர் பாபர் அசாம், "எங்களது பந்துவீச்சாளர்கள் அனைவரும் சிறப்பாக செயற்பட்டனர். விராட் கோஹ்லி, ஹார்திக் பாண்டியாதான் எங்களது தோல்விக்கு காரணம்.

கோஹ்லியை வீழ்த்த வேண்டும் என்பதற் காகத் தான் ஸ்பின்னர் களுக்கு பதிலாக வேகப்பந்து வீச்சாளர் களை முன்கூட்டியே பயன்படுத்தினோம். இதனால்தான் கடைசி ஓவரை வீச வேகப்பந்து வீச்சாளர் இல்லாமல்போகும் நிலை இருந்தது. ஸ்பின்னர் மொஹமட் நவாஸ் கடைசி ஓவரை முடிந்தவரை சிறப்பாகத்தான் வீசினார். இப்திகார் அகமட், ஷான் மசூத் ஆகியோர் விளையாடிய விதம் அபாரமாக இருந்தது" எனக் கூறினார்.

## கல்முனை சாஹிரா தேசிய பாடசாலை மீண்டும் தேசிய ரீதியில் தங்கம் வென்று சாதனை

(எம்.எஸ்.எம்.ஸாகிர்)

கல்முனை சாஹிரா தேசிய பாடசாலை வரலாற்றில் முதன்முறையாக 'தைக்கொண்டோ' சுற்றுப் போட்டியில் பங்குபற்றி 5 பதக்கங்களைப் பெற்று வரலாற்றுச் சாதனை படைத்துள்ளது.

அகில இலங்கை பாடசாலைகளுக்கிடையிலான தேசியமட்ட "தைக்கொண்டோ" சுற்றுப் போட்டி அண்மையில் கேகாலை மகா வித்தியாலயத்தில் நடைபெற்றது. இப்போட்டியில் கலந்துகொண்ட கல்முனை சாஹிரா தேசிய பாடசாலை மாணவர்கள் 1 தங்கம், 2 வெள்ளி, 2 வெண்கலம் என மொத்தமாக தேசிய ரீதியில் 5 பதக்கங்களைப் பெற்று மாகாணத்திற்கும் வலயத்திற்கும் கல்லூரிக்கும் பெருமை தேடித்தந்துள்ளனர்.

இதில் ஜே.ஏ.சுமைட் தங்கப் பதக்கமும் என்.எம். நுஸ்ரி வெள்ளிப் பதக்கமும் ஏ.எல்.எம்.அப்ரி வெண்கலப் பதக்கமும் ஏ.எம்.நாஸிக் அன்சாப் வெண்கலப் பதக்கமும் ஜே.ஏ.சுரைப் வெள்ளிப் பதக்கமும் பெற்று பாடசாலைக்குப் பெருமை சேர்த்துள்ளனர்.

இவ்வரலாற்று வெற்றியைப் பெற உறுதுணையாக இருந்து மாணவர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்து ஆலோசனைகள் மற்றும் வழிகாட்டல்களை வழங்கிய கல்லூரி அதிபர் எம்.ஐ. ஜாபிர், தமது உச்ச திறமைகளை வெளிப்படுத்தி இவ்வெற்றிகளைப் பெற்ற மாணவர்களையும் மாணவர்களைப் பயிற்றுவித்த உடற்கல்வி ஆசிரியர் யூ.எல்.எம். இப்றாஹீம், உதவி பயிற்றுவிப்பாளர்களான ஏ.ஏ.சிஹாப், எம்.எச்.ஏ.ஹஸீன், ஏ.ஏ.ஹம்தான் விளையாட்டுப் பொறுப்பாசிரியர் எம்.ஐ.எம்.அமீர், உடற்கல்விப் பிரிவு ஆசிரியர்கள், விளையாட்டுப் பயிற்றுவிப்பாளர், ஒத்துழைப்பு வழங்கிய பெற்றோர்கள் ஆகியோரைப் பாராட்டி பாடசாலை சமூகம் தமது வாழ்த்துகளைத் தெரிவித்துள்ளது.

இப் பாடசாலை இப்போட்டியில் கலந்து கொண்டமை இதுவே முதன்முறை என்பதும் குறிப்பிடத்தக்கது.



## விளையாட்டு செய்திகள்

thamilansports@gmail.com




## ஆட்டநாயகனாகி உலக சாதனை படைத்த கோஹ்லி

இந்திய – பாகிஸ்தான் அணிகளுக்கிடையில் மெல்போர்ன் கிரிக்கெட் மைதானத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற இந்திய மற்றும் பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான போட்டியில் ஆட்டநாயகன் விருதுவென்ற இந்திய அணியின் நட்சத்திர வீரர் விராட் கோஹ்லி உலகக்கிண்ணத் தொடரில் உலக சாதனையைப் படைத்தார்.

குறித்த போட்டியில் இந்தியாவின் வெற்றிக்காக துடுப்பாட்டத்தில் விராட் கோஹ்லி 53 பந்துகளில் 82 ஓட்டங்களைக் குவித்தார். இதன் மூலம் அவருக்கு போட்டியின் ஆட்டநாயகன் விருது வழங்கப்பட்டது. இதன் மூலம் இருபதுக்கு 20 உலகக்கிண்ண வரலாற்றில் அதிக ஆட்ட நாயகன் விருதுகளை வென்றவர் என்ற சாதனை இப்போது விராட் கோஹ்லி வசமாகியுள்ளது.

இருபதுக்கு 20 உலகக்கிண்ண வரலாற்றில் அதிக ஆட்ட நாயகன் விருதுகளை வென்றவர்கள்:-

6 – விராட் கோஹ்லி (இந்தியா)
5 – கிறிஸ் கெய்ல் (மேற்கிந்தியத் தீவுகள்)
5 – மஹேல ஜெயவர்தன (இலங்கை)
5 – ஷேன் வொட்சன் (அவுஸ்திரேலியா)

## உலகக்கிண்ணப் போட்டியைப் பார்வையிட காரில் கட்டாருக்கு செல்லும் கேரளப் பெண்



(ரமணி)

கட்டாரில் நடக்கும் பீபா உலகக்கிண்ணத் தொடரை பார்ப்பதற்கு மாஹேயைச் சேர்ந்த கேரளப் பெண் நாஜி நௌஷி நான்கு சக்கர வாகனத்தில் அந்நாட்டை நோக்கித் தனியாகப் பயணம் செய்கிறார். ஐந்து குழந்தைகளின் தாயான நௌஷி உதைபந்தாட்ட ரசிகையாவார். ஆர்வமுள்ள பயணியும் யூடியூபருமான நௌஷி கேரளாவில் இருந்து மஹிந்திரா காரை ஓட்டிக்கொண்டு கட்டார் நோக்கி தனது பயணத்தைத் தொடங்கினார்.

கிராம பஞ்சாயத்து அதிகாரிகள் முன்னிலையில் போக்குவரத்துத்துறை அமைச்சர் அன்டனி ராஜு கொடியசைத்து அவரது பயணத்தை ஆரம்பித்து வைத்தார். கோயம்புத்தூர் வழியாக மும்பையை அடைந்த பிறகு கப்பல் மூலம் ஓமானில் அவர் இறங்குவார். அங்கிருந்து அவர் சாலை வழியாக பயணம் செய்து ஐக்கிய அரபு எமிரேட்ஸ், பஹ்ரைன், குவைத், சவூதி அரேபியா உள்ளிட்ட அரபு நாடுகளைக் கடந்து கட்டாரை அடைவார்.

அனைத்து அத்தியாவசிய சமையல் பொருட்களும் வாகனத்தில் சேமித்து வைக்கப்பட்டிருப்பதால் பயணம் முழுமையான வாழ்க்கை அனுபவமாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுவதாக நௌஷி கூறினார். சுங்கச்சாவடிகள் மற்றும் பெற்றோல் நிலையங்கள் அருகே வாகனத்தை நிறுத்தவும் இரவு நேரங்களில் அதில் தங்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. தன்னிடம் ஓமான் ஓட்டுநர் உரிமம் இருப்பதாகவும் அது ஏற்கனவே சர்வதேச உரிமமாக மாற்றப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

## கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் அக்கரைப்பற்று பதுர் பும் போய்ஸ் அணி சம்பியன்

(றியாஸ் இஸ்மாயில்)

அட்டாளைச்சேனை ஆலம்குளம் அல்-அக்சா விளையாட்டுக் கழகத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் அக்கரைப்பற்று பதுர் பும் போய்ஸ் அணியினர் வெற்றி பெற்றனர்.

ஆலம்குளம் அக்/ ரஹ்மானியா வித்தியாலய மைதானத்தில் நேற்று முன்தினம் மாலை நடைபெற்ற இச்சுற்றுப் போட்டியின் இறுதிப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய பதுர் பும் போய்ஸ் அணியினர் 56 ஓட்டங்களைப் பெற்றனர். பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய அல்-அக்சா விளையாட்டுக் கழக அணியினர் 48 ஓட்டங்களைப் பெற்று இப்போட்டியில் 8 ஓட்டத்தினால் தோல்வியடைந்தனர்.



இறுதிப் போட்டியில் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் அட்டாளைச்சேனை அமைப்பாளர் தொழிலதிபர் ஏ.கே.அமீர் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டார். வெற்றி பெற்ற அணிக்கு வெற்றிக் கிண்ணத்துடன் 40 ஆயிரம் ரூபா பணப்பரிசும் இரண்டாமிடம் பெற்ற அணிக்கு கிண்ணத்துடன் 20 ஆயிரம் ரூபா பணப் பரிசும் வழங்கப்பட்டது.




Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7